இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 43 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 04 – வியாழக்கிழமை 21 செப்டம்பர் 2023 – மதுரை 12 + 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 43: Thiruvalluvar Year - 2054 - Purattasi 04 - Thursday 21 September 2023 - Madurai 12+8 Pages ₹5.00

## மகளிர் உரிமைக்கு 75 ஆண்டு காலம் பாடுபட்டு வரும் இயக்கம் !

# மகளிர் இட ஒதுக்கீட்டை தி.மு.க. என்றும் வரவேற்கும்!

**சென்னை, செப். 21-**

**“மகளிர் உரிமைக்கு 75 ஆண்டு காலமாக பாடுபட்டு வரும் தி.மு.கழகம், மகளிர் ஒதுக்கீட்டை அன்றும் வரவேற்றது; இன்றும் வரவேற்கிறது!” என்றும்,**

**“சர்ச்சைக்குரிய வேளாண் சட்டங்கள், குடியுரிமைத் திருத்தச் சட்டம், காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து பறிப்பு சட்டம் மற்றும் முற்பட்ட சாதியினருக்கு 10% இடஒதுக்கீடு வழங்கும் சட்டங்களை நிறைவேற்றுவதில் காட்டிய அக்கறையில் 100-ல் 1 விழுக்காடு கூட மகளிர் மசோதாவை நிறைவேற்ற மோடி அரசு காண்பிக்காதது ஏன்?” எனவும் “பெரும்பான்மை பலம் இருந்தும் கடந்த 9 ஆண்டு காலமாகப் பாராமுகமாக இருந்து விட்டு, தேர்தல் நேர வண்ணஜாலம் காட்டி ஏமாற்ற நினைக்கும் முயற்சியை மக்கள் புரிந்து கொள்வார்கள்!” “மக்கள் தொகைக் கணக் கெடுப்பு எப்போது நடத்தப்படும் என்ற உத்தரவாதம் இல்லை; நடைபெறாத மக்கள்தொகை கணக்கெடுப்பு, அதன் அடிப் படையிலான தொகுதி மறுவரையறை - அதன் பேரில் 2029-இல் அமலுக்கு வரப் போவதாக கூறப்படுவதற்கு இப்போது சட்டம் நிறைவேற்றும் விசித்திர தந்திரம் - எல்லாம் தோல்வி பயம் ஏற்படுத்தும் தேர்தல் மாய்மாலம்!” என்றும்,**

**“தொகுதி மறுவரையறை என்ற பெயரில் தென்னிந்திய மக்களை, குறிப்பாக தமிழ் நாட்டு மக்களின் மக்களவைப் பிரதிநிதித் துவத்தை குறைக்கும் பேராபத்து - சூழ்ச்சி முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண் டும்; தமிழ்நாட்டை வஞ்சிக்கமாட்டோம் என்ற உத்தரவாதத்தை ஒன்றிய அரசு இப்போதே தர வேண்டும்!” என்றும்**

**“பிற்படுத்தப்பட்ட - மிகவும் பிற்படுத்தப் பட்ட சமுதாயப் பெண்களுக்கும் இடஒதுக் கீடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கை யில் உள்ள நியாயத்தை பா.ஜ.க. அரசு பரிசீலிக்க வேண்டும்!” எனவும்,**

**- கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.**

## தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிக்கை !

தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நாடாளுமன்றத்திலும், சட்டமன்றங் களிலும் மகளிருக்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கும் மசோதா மக்களவை யில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மகளிர் மீது பா.ஜ.க.வுக்கு உண்மையான அக்கறை இருந்திருக்குமானால், ஆட்சிக்கு வந்ததும் இதனைக் கொண்டு வந்திருப் பார்கள்.

**கடந்த 9 ஆண்டுகளாக ஏன் மகளிர் மசோதாவை நிறைவேற்றவில்லை?**

சர்ச்சைக்குரிய வேளாண் சட்டங்கள், குடியுரிமைத் திருத்தச் சட்டம், காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து பறிப்பு சட்டம் மற்றும் முற்பட்ட சாதியினருக்கு 10% இடஒதுக்கீடு வழங்கும் சட்டம் போன்றவற்றைக் கடும் எதிர்ப்புக்கு இடையில் அவசர கதியில் பிடிவாதமாக நிறைவேற்றிய பா.ஜ.க. அரசு -அவற்றுக்காகக் காட்டிய அவசரத்தையோ முனைப்பையோ, எல்லோரும் வரவேற் கும் மகளிர் மசோதாவை நிறைவேற்ற கடந்த 9 ஆண்டுகாலமாகக் காட்ட வில்லை. இப்போது, நாடாளுமன்றத் தேர் தல் நெருங்கி வரும் நிலையில், தோல்வி பயம் பா.ஜ.க.வினரை வாட்டி வரும் நிலையில் மகளிருக்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீட்டை வழங்கி - ஒரு சாதனையைச் செய்துவிட்டதாக காட்டிக் கொள்கிறார்கள்.

2016ஆம் ஆண்டு மார்ச் 8-ஆம் தேதி மகளிர் நாள் அன்று நாடாளுமன்றத்தின் மக்களவை - மாநிலங்களவை ஆகிய இரண்டிலும் அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்து பெண் எம்.பி.கள் அனைவரும் சேர்ந்து இதற்காக குரல் கொடுத்தார்கள். ‘33 விழுக்காடு இடஒதுக்கீடு என்ன ஆனது?’ என்று கேட்டார்கள். அப்போது



பா.ஜ.க. அரசு வாய் திறக்கவில்லை. வாய் திறக்க ஏழு ஆண்டுகள் ஆகி இருக்கிறது. பெண்கள் சமுதாயத்தின் மீது உண்மை யான அக்கறையில் இந்த மசோதாவைக் கொண்டு வரவில்லை என்பது இதன் மூலம் தெரியவில்லையா?

**பெண்களுக்கான அங்கீகாரம் தி.மு.க. தொடர்ந்து வலியுறுத்துகிறது!**

சாதி வேறுபாடுகளற்ற சமத்துவமும், பாலின சமத்துவமும் நாகரிக சமூகத்தின் அடையாளங்கள் ஆகும். சாதி வேறுபாடு கள் அற்ற சமத்துவத்தை உருவாக்கவே சமூகநீதிக் கோட்பாட்டை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். பாலின சமத்து வம் என்பது அனைத்து வகையிலும், அனைத்து இடங்களிலும் பெண்ணுக்கு உரிய அதிகாரத்தை வழங்குவது ஆகும். அதற்கு முதலில் அவர்களுக்கு உரிய இடங்களை வழங்க வேண்டும். இதையே தொடர்ந்து திராவிட முன்னேற் றக் கழகம் வலியுறுத்தி வருகிறது. ஆட்சி அமையும் போதெல்லாம் செயல்படுத்திக் காட்டியும் வருகிறது.

* பெண்களுக்குச் சொத்தில் சம உரிமைச் சட்டம்.
* பெண் காவலர்கள் நியமனம்
* அரசுப் பணியிடங்களில் பெண் களுக்கு 40 விழுக்காடு இடஒதுக்கீடு.
* உள்ளாட்சித் தேர்தலில் பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு.
* பெண்கள் தம் சொந்தக் காலில் நிற்க வசதியாக மகளிர் சுய உதவிக் குழுக் களை அமைத்தது.
* ஒடுக்கப்பட்ட சமூகப் பெண்களுக்கு முதலில் பள்ளிக்கல்வி வரை இலவ சக் கல்வியும், அதன் பிறகு கல்லூரி வரை இலவசக் கல்வியும் வழங்கப் பட்டது.
* ஒன்று முதல் 5 வரை யிலான அரசுப் பள்ளி ஆசிரியர்களாக மக ளிரை நியமித்த அரசு தி.மு.க. அரசு.
* கிராமப்புறப் பெண் களுக்குப் பணி நியம னத்தில் முன்னுரிமை கொடுத்தது கழக அரசு.
* மகளிருக்குப் பேருந்து களில் கட்டணமில்லா விடியல் பயணம்.
* மகளிருக்கு 1000 ரூபாய் உரிமைத்தொகை - ஆகிய பல்வேறு திட்டங்களைச் செயல்படுத் திக் காட்டியது தி.மு.க. அரசு.

**உள்ளாட்சி அமைப்புகளில் 33 சதவிகிதம் பெண்களுக்கு இடஒதுக்கீடு தந்தவர் கலைஞர்!**

பெண்களுக்கு உள்ளாட்சி அமைப்பு களில் 33 விழுக்காடு இடஒதுக்கீட்டை முத லமைச்சர் கலைஞர் அவர்கள் 1996-ஆம் ஆண்டு வழங்கினார்கள். ஊராட்சி ஒன்றி யம், நகராட்சி, மாநகராட்சி போன்ற உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல் 1990-ஆம் ஆண்டு இறுதியில் தி.மு.க. ஆட்சியில் அறிவிக்கப்பட்ட பின்னர், கழக ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது. அதன் பின் னர் நடைபெற்ற ஐந்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் உள்ளாட்சி மன்றங்க ளுக்கான தேர்தலை நடத்த அந்த ஆட்சி யினர் முன்வரவே இல்லை.

1996-ஆம் ஆண்டு, தி.மு.க. வெளி யிட்ட தேர்தல் அறிக்கையில் பக்கம் 6-இல், “அடுத்து அமைக்கப்படும் தி.மு.க. அரசு, புதிய சட்டமன்றத்தின் முதல் கூட்டத் தொட ரிலேயே உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல் தேதிகளை அறிவிக்கும் என்று உறுதி கூறுவதோடு, அது வெறும் அறிவிப் பாக இருந்து விடாமல், நிச்சயமாக நடை முறைப்படுத்தப்படும் என்ற உறுதியை அளிக்கிறோம்” என்றும் குறிப்பிட்டிருந்தோம்.

> **“சுமார் 27 ஆண்டுகளாக இந்த மசோதா நிலுவையில் உள்ளது. 1996-ஆம் ஆண்டு தி.மு.க. அங்கம் வகித்த ஒன்றிய அரசில் மகளிர் இடஒதுக்கீடு மசோதா முதன்முதலாக தாக்கல் செய்யப்பட்டது. 2005-ஆம் ஆண்டும் தி.மு.க. இடம்பெற்ற ஒன்றிய அரசு இதனைத் தாக்கல் செய்தது. முதலில் ஆதரிப்பதாகச் சொன்ன பா.ஜ.க. எதிர்த்தது. பா.ஜ.க. பெண் உறுப்பின ரான உமா பாரதியே இதனைக் கடுமையாக எதிர்த்தார். கடந்த காலத்தில் இதை எதிர்த்தவர்களில் தற்போதைய உ.பி. முதல்வர் யோகி ஆதித்யநாத்தும் முக்கிய மானவர்.”**

அவ்வாறு அறிவித்ததற்கிணங்க 96-ஆம் ஆண்டு அக்டோபர் 9 மற்றும் 12 தேதிகளில் உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தப்படும் என்று தமிழ்நாடு தேர்தல் ஆணையர் மூலமாக அறிவிப்பு செய்யப் பட்டது.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

---

## மசோதாவை காங்கிரஸ் ஆதரிக்கிறது


# மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை உடனடியாக அமல்படுத்த வேண்டும்!

## மக்களவையில் சோனியா காந்தி பேச்சு!

*புதுடெல்லி, செப். 21-*

*மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை காங்கிரஸ் கட்சி ஆதரிக்கிறது என்று உடனடியாக இந்த மசோதாவை அமல் படுத்த வேண்டும் என் றும் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் சோனியா காந்தி மக்களவையில் கோரிக்கை விடுத்தார்.*

*காங்கிரஸ் மூத்த தலைவர் திருமதி.சோனியா காந்தி பேசியதாவது, “சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் பெண்களுக்கு 33% இட ஒதுக்கீடு வழங்கும் ‘நாரி சக்தி வந்தன்’ (பெண் சக்திக்கு வணக்கம்) மசோதாவை காங்கிரஸ் ஆதரிக்கிறது. எனது தனிப்பட்ட வாழ்க்கை யிலும் இது ஒரு உணர்*



*வுப்பூர்வமான தருணம். பெண்களுக்கு உள்ளாட் சித் தேர்தலில் இட ஒதுக் கீடு கொண்டு வர முதல் முறையாக முயன்றவர் எனது கணவர் ராஜிவ் காந்தி. ஆனால், அந்த மசோதா மாநிலங்கள வையில் 7 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்க டிக்கப்பட்டது.*

*அதன் பிறகு பி.வி. நரசிம்ம ராவ் ஆட்சிக் காலத்தில் அந்த மசோதா நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம், இன்று நாட்டில் 15 லட்சம் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் தலைவர்கள் உருவாகி இருக்கிறார் கள். இதன் மூலம் ராஜிவ் காந்தியின் கனவு ஓரளவு நனவானது.*

*சட்டமன்றம் மற்றும் நாடாளுமன்றத்திலும் பெண்களுக்கு 33% இட ஒதுக்கீடு வழங்கும் இந்த சட்டம் நிறைவேறினால் தான் அவரது கனவு முழு மையாக நனவாகும்.*

*இந்த மசோதா நிறை வேறுவதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். அதேநேரத்தில், காங்கி ரஸ் தலைமையிலான முந்தைய ஆட்சிக்காலத் தில் இந்த மசோதா மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டது.*

*அவ்வாறு நிறைவேற் றப்பட்டு 13 ஆண்டு களாக இந்திய பெண்கள் காத்திருக்கிறார்கள். இன்னும் எத்தனை ஆண்டுகளுக்குக் காத்தி ருப்பது? இந்திய பெண் களை இவ்வாறு காத்தி ருக்க வைப்பது சரியா? இந்த மசோதா நிறை வேற்றப்பட்டு உடனடி யாக அமல்படுத்தப்பட வேண்டும். அதேநேரத் தில், சாதி வாரி கணக்கெ டுப்பு நடத்தப்பட வேண்டும். அதன் அடிப் படையில் SC, ST மற்றும் OBC சமூகங்களைச் சேர்ந்த பெண்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கப் பட வேண்டும்”.*

*இவ்வாறு சோனியா காந்தி தெரிவித்தார்.*

---

## மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை

# அரசியல் லாபத்துக்காக பா.ஜ.க. பயன்படுத்துகிறது!

## மக்களவையில் கனிமொழி கருணாநிதி பேச்சு!

**புதுடெல்லி, செப். 21-**


**“மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை அரசியல் லாபத்துக்காக பா.ஜ.க. பயன்படுத்துகிறது” என்று மக்களவையில் மகளிருக் கான 33 சதவிகித இட ஒதுக்கீடு மசோதா மீதான விவாதத்தில் மக் களவைத் துணைத் தலைவர் கனி மொழி கருணாநிதி குறிப்பிட்டார்.**

*கனிமொழி கருணாநிதி எம்.பி. பேசியதாவது: -*

*பெண்களுக்கு நீதிக்கட்சி ஆட்சி காலத்தில் வாக்கு ரிமை அளிக்கப்பட்டது.*

*மசோதாவை பா.ஜ., அரசியல் ஆக்குகிறது. மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை 1996ல் முதலில் கொண்டு வந்தது தி.மு.க.தான்.*

*பா.ஜ., தேர்தல் வாக்கு றுதியில் மகளிர் இட ஒதுக் கீடு மசோதா இடம் பெற்று இருந்தது. மகளிர் இட ஒதுக் கீடு. மசோதா பல ஆண்டு களாக கிடப்பில் போடப் பட்டது. மசோதா பெண்க ளுக்கு மகிழ்ச்சியை கொடுக் கும் அளவில் கவலையையும் அளிக்கிறது. ஆண்களை*



*சார்ந்திருக்கும் நிலை மாறி னால்தான் பெண்கள் விடு தலை சாத்தியமாகும். 13 ஆண்டுகளாக மகளிர் மசோ தாவை நிறைவேற்ற முடி யாத சூழல் இருந்தது.*

*மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை பா.ஜ.க., ரகசி யமாக தயாரித்தது ஏன்?. எந்த நிபந்தனைகளும் இல் லாமல் உடனடியாக அமல் படுத்த வேண்டும். தொகுதி வரையறைக்கு பின்னரே மகளிர் மசோதா என்பது ஏற்று கொள்ள முடியாது.*

*மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை ரகசியமாகக் கொண்டு வந்துள்ளார்கள்; எந்த அரசியல் கட்சி தலைவ ரிடமும் ஆலோசிக்கவில்லை.*

*1996ல் மகளிர் இடஒதுக்கீடு மசோதா தி.மு.க. ஆதரவு டன் கொண்டுவரப்பட்டது. மகளிர் இடஒதுக்கீடு மசோ தாவை கொண்டுவர ஏன் இவ்வளவு கால தாமதம்?*

*எப்போது மகளிர் இடஒதுக்கீடு சட்டம் அமல் படுத்தப்படும்?. மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை தாக்கல் செய்வதில் இவ்வ ளவு ரகசியம் காட்டியது ஏன்? மகளிரை எம்.எல்.ஏ. ஆக்குவதுபோல அவர்களை தேர்வு செய்யும் உரிமை மகளிருக்கு முழுமையாக வழங்கப்பட வேண்டும். இந்த சட்டத்தைக் கொண்டு வர பல ஆண்டுகளாக நாங் கள் கோரிக்கை விடுத்து வரு கிறோம்.*

*பெண்களை மதிக்கி றோம், அவர்களின் சுதந்தி ரத்திற்காக பாடுபடுகிறோம் என்ற ஆண்களின் பேச்சு கள் பெண்களை ஏமாற்றும் சூழ்ச்சி மட்டுமே என பெரி யார் கூறியதை நினைவு படுத்துகிறேன்.*

*உங்களுக்கு இந்த நாட் டின் மீது எவ்வளவு உரிமை உள்ளதோ, அதேபோல உரிமை எங்களுக்கும் உண்டு. இந்த நாடும், இந்த நாடாளுமன்றமும் எங்க ளுக்கும் சொந்தம்தான். பெண்களை மதிப்பது போல் ஆண்கள் நடந்து கொள்வது ஏமாற்று வேலை. ஜெயலலிதா வலிமை வாய்ந்த தலைவர்தான். அதை ஏற்றுக்கொள்வதில் எனக்கு எந்த தயக்கமும் இல்லை. பட்டங்கள் ஆள்வ தும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம் என்று பாரதி கூறி யதுதான் இங்கே நினை விற்கு வருகிறது. தற்போ தைய மகளிர் இடஒதுக்கீடு நிபந்தனைகளை கொண் டுள்ளது.*

*இதனால் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், தற்போதைய மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார். மகளிர் இடஒதுக்கீடு மசோ தாவை அரசியலுக்கு பயன் படுத்துகிறது பா.ஜ.க.*

*இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. பேசி னார்.*

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 21-09-2023

# இப்போதுதான் புரிகிறதா?

இந்தியாவின் முதல் தலைமை அமைச்சர் ஜவஹர்லால் நேருவைப் பற்றி இன்றைய தலைமை அமைச்சர் மோடி அவர்களுக்கு இப்போதுதான் புரிகிறது. பத்தாண்டுகாலம் நேரு எதிர்ப்பு பிரச்சாரத்தைச் செய்து வந்த மோடி அவர்கள், புதிய நாடாளுமன்றத்துக்குப் புறப்படுவதற்கு முன்னால் ஆற்றிய உரையில் நேருவைப் புகழ்ந்துவிட்டார். அதற்காகவே அவரை பாராட்டத்தான் வேண்டும்.

**ஒன்றிய கல்வித் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள அமைப்பு இந்திய வரலாற்று ஆராய்ச்சிக் கவுன்சில். 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் நாள் இந்த அமைப்பு வெளியிட்ட பதாகையில் ஜவஹர்லால் நேருவின் படமும் இல்லை, மௌலானா அபுல் கலாம் ஆசாத் படமும் இல்லை. சுதந்திரப் போராட்டத்தில் பங்கெடுத்து 9 ஆண்டுகள் சிறையில் இருந்த நேருவின் படமே மறைக்கப்பட்டது. நேருவின் பெயரை 2022ஆம் ஆண்டு சுதந்திர தின உரையில் பிரதமர் நரேந்திரமோடி குறிப்பிடவில்லை.**

**டெல்லியில் நேரு நினைவு அருங்காட்சியகம் மற்றும் நூலகம் இருக்கிறது. இதன் பெயரையே பிரதமர் அருங்காட்சியகம் மற்றும் நூலகச் சங்கம் என்று மாற்றி விட்டார்கள். முன்னாள் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி அவர்களால் உருவாக்கப்பட்டது இது. இதனை முன்னாள் துணை குடியரசுத் தலைவர் ராதாகிருஷ்ணன் திறந்து வைத்தார். அத்தகைய புகழுக்குரியது இது. இதன் பெயராக இருந்த நேரு பெயரை கடந்த ஆகஸ்ட் 14 அன்றுதான் தூக்கினார்கள்.**

கோவா பிரச்சினையில் பிரதமர் நேரு சரியாக நடந்து கொள்ளவில்லை, தனது உலகளாவிய இமேஜை காப்பாற்றிக் கொள்வதில் தான் அக்கறை செலுத்தினார் என்று நாடாளுமன்றத்தில் 2022 பிப்ரவரி மாதம் பேசினார் பிரதமர் மோடி.

“காந்தி, நேரு என குடும்பப் பெயர்களில் 600 திட்டங்கள் இருந்ததாகச் செய்தி படித்தேன். அவர்களுடைய தலைமுறையைச் சேர்ந்தவர்கள் ஏன் நேருவின் பெயரை குடும்பப் பெயராக வைப்பது இல்லை? நேருவின் பெயரை எங்காவது நாங்கள் குறிப்பிட மறந்து விட்டால் காங்கிரசார் அப்செட் ஆகிறார்கள். நேரு மிகப்பெரிய மனிதர். பிறகு ஏன் அவரது பெயரை யாரும் குடும்பப் பெயராகப் பயன்படுத்துவது இல்லை? நேரு பெயரை பயன்படுத்துவதில் உங்களுக்கு என்ன அவமானம்? பயம்?” என்று கடந்த பிப்ரவரி மாதம் மாநிலங்களவையில் பேசினார் பிரதமர் மோடி.

பெரோஸ் காந்தி – என்ற பெயரை வைத்தே இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி, ராகுல் காந்தி எனச் சொல்லப்பட்டது. இதனை தான் ‘நேரு’ என்று ஏன் வைக்கவில்லை என்று நாடாளுமன்றத்தில் கேட்டார் பிரதமர்.

காஷ்மீர் விவகாரத்தில் நேரு சரியாக நடந்து கொள்ளவில்லை என்று விமர்சித்தார் ( 2022 அக்டோபர்) பிரதமர். நேருவுக்கும் இந்திய ஜனநாயகத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று (2018 பிப்ரவரி) நாடாளுமன்றத்திலேயே குற்றம் சாட்டினார் பிரதமர் மோடி. இப்படி எல்லாம் தொடர்ந்து நேருவை அவமானப்படுத்தி வந்தவர் தான் பிரதமர் மோடி. ஆனால் இப்போது நாக்கை அப்படியே திருப்பிப் போட்டுவிட்டார்.” ‘உலகம் உறங்கிக் கொண்டிருக்கும் போது இந்தியாவே விழித்துக் கொண்டிருக்கிறது’ என்ற பிரதமர் நேருவின் பேச்சுதான் உலகமெங்கும் பெரும் பாராட்டைப் பெற்றது. அந்தப் பேச்சு தற்போது நமக்கு உற்சாகத்தை அளிக்கிறது” என்று சொல்லி இருக்கிறார் பிரதமர் மோடி. நேரு,சாஸ்திரி, இந்திரா, நரசிம்மராவ், வாஜ்பாய் என்று பல்வேறு பிரதமர்கள் தங்கள் சிறப்பான தலைமையை வெளிப்படுத்தி இருக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டு இருக்கிறார்.

இந்திரா காந்தி காலத்தில் வங்க தேசம் உருவானதையும் நினைவூட்டி இருக்கிறார் பிரதமர். இராஜேந்திர பிரசாத், அண்ணல் அம்பேத்கர், மாவீரன் பகத்சிங் ஆகியோரையும் நினைவு கூர்ந்துள்ளார் பிரதமர்.

இந்திய நாடாளுமன்ற ஜனநாயக வரலாற்றை இப்போதுதான் அவர் படிக்க ஆரம்பித்து பேசுகிறார் என்பதை இதன் மூலமாக உணர முடிகிறது. இதற்கே ஒன்பது ஆண்டுகள் ஆகிவிட்டது!

**ஒன்பது ஆண்டுகள் - ஒன்பது முறை - ஒன்பது சிறைகளில் இந்தியாவின் விடுதலைக்காக அடைக்கப்பட்டு இருந்தவர் நேரு. ‘என்னுடைய அரசியல் வாரிசு நேருதான்’ என்று காந்தி சொன்னார். ‘விடுதலை பெற்ற இந்தியாவின் தலைமை மகுடம் நேருவுக்குத்தான் போகவேண்டும், ஏனென்றால் அவர்தான் முழுமையான இந்தியர்’ என்றும் காந்தி சொன்னார். அத்தகைய ஆட்சியை தான் நேருவும் வழங்கினார்.**

பல்வேறு மொழி பேசும் மக்கள் ஒற்றுமையாக வாழ மொழி வாரி மாகாணங்களை உருவாக்கிக் கொடுத்தார். இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை இந்தி அவர்கள் மீது திணிக்கப்பட மாட்டாது என்று உறுதி அளித்தார். ஐந்தாண்டுத் திட்டங்களைக் கொண்டுவந்து - அனைத்து மாநிலங்களுக்கும் பல்வேறு திட்டங்களை உருவாக்கிக் கொடுத்தார். வறுமை ஒழிப்புத் திட்டங்களை செயல்படுத்தினார். அனைத்து மாநிலங்களிலும் பொதுத்துறை நிறுவனங்களை உருவாக்கித் தந்தார். மதச்சார்பற்ற மனிதராக அவர் இருந்தார். சகோதரத்துவத்தை வலியுறுத்தினார். நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தார். அனைத்து தரப்பும் விவாதம் செய்யும் களமாக நாடாளுமன்றத்தை நடத்திக் காட்டினார். மதச்சார்பின்மையின் இலக்கணமாகத் திகழ்ந்தார். கூட்டாட்சி நெறிமுறைகளை அவர் அடிக்கடி பேசினார். அணிசேராக் கொள்கையை கடைப்பிடித்தார். அதனால் உலகத் தலைவர்கள் அனைவரும் அவரை வணங்கினார்கள்.

இத்தகைய நேருவின் பெருமையை மறைக்கப் பார்த்தார்கள். முடியவில்லை. பாராட்டத் தொடங்கிவிட்டார்கள். நல்ல மாற்றம் தான்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.09.2023) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறையின் நிர்வாக கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற திருக்கோயில் பணியாளர்களுக்கு துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டத்தின்கீழ், வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியத்தை ரூ.3,000/–லிருந்து ரூ.4,000/–மாகவும், குடும்ப ஓய்வூதியத்தை ரூ.1,500/–லிருந்து ரூ.2,000/–மாகவும் உயர்த்தி அதற்கான காசோலைகளை வழங்கிடும் அடையாளமாக, ஓய்வுபெற்ற 5 திருக்கோயில் பணியாளர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறும் 5 பணியாளர்களின் குடும்பத்தினருக்கு ஓய்வூதியத்திற்கான காசோலைகளை வழங்கி, தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர் அ.சங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### திருக்கோயில்களில் பணிபுரிந்து

# ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு உயர்த்தப்பட்ட ஓய்வூதியம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, செப்.21-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.09.2023) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறையின் நிர்வாக கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற திருக்கோயில் பணியாளர்களுக்கு துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டத்தின்கீழ், வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியத்தை ரூ.3,000/லிருந்து ரூ.4,000/மாகவும், குடும்ப ஓய்வூதியத்தை ரூ.1,500/லிருந்து ரூ.2,000/மாகவும் உயர்த்தி அதற்கான காசோலைகளை வழங்கிடும் அடையாளமாக, ஓய்வுபெற்ற 5 திருக்கோயில் பணியாளர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறும் 5 பணியாளர்களின் குடும்பத்தினருக்கு ஓய்வூதியத்திற்கான காசோலைகளை வழங்கி, தொடங்கி வைத்தார்.**

இந்து சமய அறநிலையத்துறை தனது கட்டுப்பாட்டிலுள்ள தொன்மை வாய்ந்த திருக்கோயில்களை பழமை மாறாமல் புனரமைத்து குடமுழுக்கு நடத்துதல், திருக்குளத் திருப்பணி, திருத்தேர் திருப்பணி மற்றும் பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், திருக்கோயிலுக்குச் சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்தல், திருக்கோயில் பணியாளர்கள் மற்றும் ஓய்வு பெற்ற பணியாளர்களின் நலன்களை பாதுகாத்தல் போன்ற பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறது. மேலும் சட்டமன்றத்தில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளையும் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.

2023 - 2024 ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை சட்டமன்ற அறிவிப்பில் “துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வுபெறும் திருக்கோயில் பணியாளர்களுக்கு வழங்கப்படும் மாத ஓய்வூதியம் ரூ.3000/ஆகும். இவ்வரசின் தொலைநோக்கு பார்வை திட்டத்தின் கீழ் அறிவித்தவாறு துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வு பெறும் திருக்கோயில் பணியாளர்களின் நலன் கருதி அவர்களுக்கு வழங்கப்படும் மாத ஓய்வூதியம் ரூ.3000/லிருந்து ரூ.4,000/ஆக உயர்த்தி வழங்கப்படும்” என்றும், “ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெற்று வந்த பணியாளர் இறந்துவிட்டால் அவரின் வாரிசுதாரருக்கு மாதந்தோறும் ரூ.1500/ குடும்ப மாத ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டு முதல் குடும்ப ஓய்வூதியம் ரூ.1500/லிருந்து ரூ.2000/ஆக உயர்த்தி வழங்கப்படும்” என்றும் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்புகளை செயல்படுத்திடும் வகையில், முதலமைச்சர் அவர்கள், துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற திருக்கோயில் பணியாளர்களுக்கு உயர்த்தப்பட்ட ஓய்வூதியத் தொகையான ரூ.4,000/ மற்றும் உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியத் தொகையான ரூ.2,000/ ஆகியவற்றிற்கான காசோலைகளை ஓய்வுபெற்ற திருக்கோயில் பணியாளர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறும் பணியாளர்களின் குடும்பத்தினருக்கு வழங்கினார். இதன்மூலம் ஆண்டொன்றுக்கு 2,454 ஓய்வூதியதாரர்களும், 304 குடும்ப ஓய்வூதியதாரர்களும் பயன்பெறுவர்.

இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர் அ.சங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### 12, 500 கன அடி நீரை உடனடியாக கர்நாடகம் திறக்க வேண்டும்!

# காவிரி விவகாரம் - உச்சநீதிமன்றம்தான் ஒரே நம்பிக்கை!

## நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் பேட்டி

**புதுடெல்லி, செப்.21-**

**காவிரி விவகாரத்தில் உச்சநீதிமன்றம்தான் தமிழ்நாட்டுக்கு இருக்கும் ஒரே நம்பிக்கை என நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் தெரிவித்துள்ளார்.**

தமிழ்நாட்டுக்கு தர வேண்டிய தண்ணீரை, கர்நாடக அரசு உடனடியாக திறந்துவிடுமாறு ஒன்றிய அரசு உத்தரவிட வலியுறுத்தி, ஒன்றிய நீர்வளத்துறை மந்திரி கஜேந்திர சிங் ஷெகாவத்தை, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் தமிழ்நாட்டின்



அனைத்துக்கட்சி எம்.பி.க்கள் நேற்று முன்தினம் சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர்.

இந்நிலையில், காவிரி வழக்கு இன்று உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வர உள்ள சூழலில், தமிழ்நாடு அரசு சார்பில் காவிரி வழக்கில் ஆஜராகி வரும் மூத்த வழக்கறிஞர் முகுல் ரோத்தகியுடன் டெல்லியில் அமைச்சர் துரைமுருகன் ஆலோசனை மேற்கொண்டார்.

ஆலோசனைக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் துரைமுருகன், கூறுகையில் காவிரி விவகாரத்தில் ஆரம்பம் முதல் உச்சநீதிமன்றம்தான் தமிழ்நாட்டுக்கு தீர்வை வழங்கி வருவதாகத் தெரிவித்தார். நடுவர் மன்றம் அமைத்தது முதல் காவிரி ஆணையம் அமைக்கப்பட்டது வரை உச்ச நீதிமன்ற உத்தரவுப்படியே நடைபெற்று வருவதாகக் குறிப்பிட்ட அமைச்சர் துரை முருகன், காவிரி வழக்கில் உச்சநீதிமன்றம்தான் தமிழ்நாட்டுக்குஒரேநம்பிக்கை எனத் தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அமைச்சர் துரைமுருகன், தமிழ்நாட்டின் உடனடித் தேவைக்கு 12 ஆயிரத்து 500 கன அடி நீரை திறக்க, உச்ச நீதிமன்றத்தில் கோரிக்கை வைக்க உள்ளதாகவும் தெரிவித்தார்.

### கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்

# சமுதாயம் - நாட்டின் வளர்ச்சிக்கு தூண்டுகோலானத் திட்டம்!

## மதுரையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் புகழாரம்!

*மதுரை, செப். 21-*

*500 பெண்களுக்கு கலைஞர் உரிமைத் தொகையை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி பேசுகையில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் சமுதாய மற்றும் நாட்டின் வளர்ச்சிக்கு தூண்டுகோலாக உள்ளது என்றும் தி.மு.க. ஆட்சியில் தான் பெண்களின் முன்னேற்றத்துக்கு ஏராளமான திட்டங்கள் மகளிர் உரிமைத் திட்டம் சமுதாய வளர்ச்சி மற்றும் நாட்டின் வளர்ச்சிக்கு பெரிய*



*தூண்டுகோலாக உள்ளது என்றும் குறிப்பிட்டார்.*

*இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மதுரை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். அதன்படி, கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கும் நிகழ்ச்சி மதுரை மேலூரில் நடைபெற்றது. இதில், 500 பெண்களுக்கு உரிமைத் தொகையை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார். வணிக வரித்துறை அமைச்சர் மூர்த்தி, சிறப்பு திட்ட செயலாக்கத்துறை செயலாளர் தாரேஸ் அகமத், மாவட்ட ஆட்சியர் சங்கீதா, சட்டமன்ற உறுப்பினர் கோ. தளபதி, மேயர் இந்திராணி பொன்வசந்த் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தி.மு.க. ஆட்சியில் பெண்களின் கல்விக்காக செயல்படுத்தப்பட்டுள்ள மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டம், மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து சேவை உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை பட்டியலிட்டார். மகளிர் உரிமைத் திட்டம் சமுதாய வளர்ச்சி மற்றும் நாட்டின் வளர்ச்சிக்கு பெரிய தூண்டுகோலாக உள்ளதாகவும் கூறினார்.*

*முன்னதாக நேற்று முன்தினம் மதுரைக்கு வருகை தந்த அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களுக்கு பேட்டியளிக்கையில் “பெண்களுக்கான 33 சதவிகித இட ஒதுக்கீடு மசோதாவில் உரிய விளக்கம் இல்லை. மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்த வேண்டும் என்கிறார்கள். அதேபோல எல்லை நிர்ணயம் செய்ய வேண்டும் என்கிறார்கள்” என்றும் கூறியுள்ளார்.*

## ஒன்றிய பா.ஜ.க. அரசு சமூக நீதியை அமல்படுத்துவதில்லை!

# இட ஒதுக்கீடு வழங்கும் அதிகாரம் மாநிலங்களுக்கு இருக்க வேண்டும்!

### அகில இந்திய சமூக நீதிக் கூட்டமைப்பு நடத்திய 2-வது தேசிய மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை !



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.9.2023) முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக அகில இந்திய சமூக நீதி கூட்டமைப்பு நடத்தும் மாபெரும் இரண்டாவது தேசிய மாநாட்டில் கலந்து கொண்டு தலைமையுரையாற்றினார். இக்கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினரும், அகில இந்திய சமூக நீதி கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளருமான பி. வில்சன், ஜார்கண்ட் மாநில முதலமைச்சர் ஹேமந்த் சோரன், பீகார் மாநில துணை முதலமைச்சர் தேஜஸ்வி யாதவ், கர்நாடக மாநில முன்னாள் முதலமைச்சர் வீரப்ப மொய்லி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் டி.ராஜா, சமாஜ்வாதி கட்சித் தலைவரும், உத்தர பிரதேச மாநில முன்னாள் முதலமைச்சருமான அகிலேஷ் யாதவ், ஜம்மு காஷ்மீர் தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான பரூக் அப்துல்லா, மகாராஷ்டிரா மாநில உணவுத்துறை அமைச்சர் சாகன் புஜ்பால், சமாஜ்வாதி கட்சி பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ராம் கோபால் யாதவ், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சஞ்சய் சிங், டாக்டர் கே. கேசவ ராவ், திருமதி பிரியங்கா சதுர்வேதி, ஜான் பிரிட்டஸ், மனோஜ் குமார், மஸ்தான் ராவ், ஜவஹர் சிர்கர், திருமதி வந்தனா ஹேமந்த் சாவன், ஆ.ராசா, திருச்சி சிவா உள்ளிட்ட கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள், பல்வேறு அரசியல் கட்சி மற்றும் அமைப்புகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**சென்னை, செப். 21-**

**அகில இந்திய சமூக நீதிக் கூட்டமைப்பு நடத்திய 2-வது தேசிய மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக உரையாற்றினார். அவரது உரையில், ஒன்றிய பா.ஜ.க. அரசு சமூக நீதியை அமல்படுத்துவதில்லை எனவும், இட ஒதுக்கீடு வழங்கும் அதிகாரம் மாநிலங்களுக்குத்தான் இருக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.**

முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (19.09.2023) அகில இந்திய சமூகநீதிக் கூட்டமைப்பின் இரண்டாவது தேசிய மாநாட்டில் கலந்து கொண்டு, காணொலிக் காட்சி வாயிலாகத் தலைமையுரை ஆற்றினார்.

முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :-

அகில இந்திய சமூகநீதிக் கூட்டமைப்பின் இரண்டாவது மாநாட்டில் கலந்துகொண்டு உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

கடந்த ஏப்ரல் 3ஆம் நாள் நடைபெற்ற முதல் மாநாட்டைத் தொடர்ந்து, இப்போது இரண்டாவது மாநாட்டிலும் கலந்து கொள்ளும் வாய்ப்பை பெற்றுள்ளேன். சமூகநீதி பேசும் இடத்தில் நிச்சயமாக நான் இருப்பேன் என்ற அடிப்படையில் நான் பங்கெடுத்து உரையாற்றுகிறேன்.

* சமூக நீதி Social Justice
* மதச்சார்பற்ற அரசியல் Secular Politics
* சமதர்மம் Socialism
* சமத்துவம் Equality
* மாநில சுயாட்சி State Autonomy
* கூட்டாட்சிக் கருத்தியல் - Federalism

இவை உயிர் வாழும் இந்தியாவே, இணையற்ற இந்தியா என்பதால், இத்தகைய கருத்தியல்களை முன்னெடுக்க திராவிட முன்னேற்றக் கழகம் அகில இந்திய அளவில் சில கூட்டமைப்புகளை உருவாக்கி வருகிறது. அதில் மிகமிக முக்கியமானது இந்த சமூக நீதிக் கூட்டமைப்பு!

**மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி.க்கு எனது பாராட்டுகள்!**

கழகத்தின் சார்பில் இதனை ஒருங்கிணைக்க தன்னை முழுமையாக ஒப்படைத்துக் கொண்டவர், மாநிலங்களவை உறுப்பினரும் மூத்த வழக்கறிஞருமான வில்சன் அவர்கள். தன்னிடம் தரப்பட்ட மற்றுமொரு வேலையாகக் கருதாமல், தன்னுடைய வாழ்க்கைக் கடமையாக நினைத்து இந்தக் கூட்டமைப்பை உருவாக்கி - தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார். அவருக்கு என்னுடைய பாராட்டுகளையும் - அழைப்பினை ஏற்று வருகை தந்துள்ள அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுக்கு எனது நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் சமூகநீதியைத்தான் இயக்கத்தின் இலக்கணமாக வைத்துள்ளது. இந்த இயக்கம் உருவாகக் காரணமே சமூகநீதிதான். சமூகநீதி - சமதர்ம சமுதாயத்தை அமைப்பதற்காகவே திராவிட இயக்கம் தோன்றியது. 1916ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட தென்னிந்திய நல உரிமைச் சங்கம் எனப்படும் நீதிக்கட்சியானது சமூகநீதியை உருவாக்கவே தொடங்கப்பட்டது.

**இந்தியாவில் சமூக நீதிக்கு வழிகாட்டியது திராவிட இயக்கம்!**

சென்னை மாகாணத்தில் ஆட்சியைக் கைப்பற்றிய நீதிக்கட்சியின் ஆட்சியில், 1922ஆம் ஆண்டு, அன்றைய முதலமைச்சர் பனகல் அரசர் அவர்கள் வகுப்புவாரிப் பிரதி நிதித்துவ உரிமை ஆணையைப் பிறப்பித்தார். அதுதான் இன்றுவரை தமிழ்நாட்டில் தொடர்கிறது. தமிழ்நாட்டைப் பார்த்து பல்வேறு மாநிலங்கள் சமூகநீதியை வழங்கி வருகின்றன. தமிழ்நாட்டு மக்களுக்கு சமூகநீதி வழங்கியது மட்டுமல்ல, இந்தியாவின் மற்ற மாநில ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் அத்தகைய உரிமை கிடைக்க வழி காட்டியதும் திராவிட இயக்கம்தான்!

தமிழ்நாட்டில் நடந்த போராட்டங்களின் காரணமாகத்தான் இந்திய அரசியலமைப்புச் சட்டமே முதன்முறையாகத் திருத்தப்பட்டது. "சமுதாயத்திலும் கல்வியிலும் பிற்படுத்தப்பட்ட வராக இருக்கும் எந்தச் சமூகத்தவர்க்கும் செய்யும் சலுகைகளை, அரசியல் சட்டத்தின் எந்தப் பிரிவும் தடுக்காது" என்பதுதான் அரசியலமைப்புச் சட்டத்தில் செய்யப்பட்ட 15(4) என்ற முதலாவது திருத்தம்! இந்த திருத்தத்துக்குக் காரணம், "happenings in Madras" என்று நாடாளுமன்றத்திலேயே சொன்னார் அன்றைய பிரதமர் நேரு.

## சமூக நீதியை அடிப்படையாகக் கொண்டு செயல்படும் தி.மு.க.!

'Socially and Educationally' என்பதுதான் அரசியலமைப்புச் சட்டத்தின் சமூகநீதி வரையறை! பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைக்க அதிகாரமளிக்கும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 340ஆவது பிரிவில் 'Socially and Educationally' என்பதுதான் வரையறையாக உள்ளது. அதே சொல்தான் அரசியலமைப்புச் சட்டத்தின் திருத்தத்திலும் சொல்லப்பட்டது. அதாவது சமூகநீதி எனப்படும் இடஒதுக்கீடு என்பதே சமூகரீதியாகவும், கல்வி ரீதியாகவும் பின் தங்கியவர்களுக்குத் தரப்பட வேண்டும் என்பதுதான் இந்திய அரசியலமைப்புச் சட்ட வரையறை!

இதனைத் தொடர்ந்து அகில இந்தியாவுக்குமான சமூகநீதிக் குரலை எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் எதிரொலித்தார்கள். 14.10.1973 அன்று அலகாபாத்தில் உத்தரப் பிரதேச மாநில பட்டியலின பிற்படுத்தப்படோர் மாநாடு நடந்தது. அதில் முதலமைச்சர் கலைஞர் பங்கெடுத்து உரையாற்றினார்.

தனது உரையின் முடிவில் இப்படிக் குறிப்பிட்டார் கலைஞர் அவர்கள்... "பட்டியலின - பின்தங்கிக் கிடக்கின்ற சமுதாயத்திற்காக ஒன்றிய அரசினர் இரண்டு முன்னெடுப்புகளை நினைவில்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒன்றிய அரசு வேலை வாய்ப்புகளில் பட்டியலின மக்களுக்கு ஒதுக்கப்பட்ட இடம் ஒழுங்காக முழுமையாக நிரப்பப்பட வேண்டும். அதுபோல ஒன்றிய அரசாங்கத்தினுடைய வேலைவாய்ப்புகளில் - இனிமேல் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு, இவ்வளவு இடம் என்று ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். அதையும் ஒன்றிய அரசு உடனடியாகச் செய்ய வேண்டும்" என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரை ஆற்றினார்கள்.

**மண்டல் பரிந்துரைகளை அமல்படுத்த அழுத்தம் கொடுத்தவர் கலைஞர்!**

இதை வைத்துதான் 1978ஆம் ஆண்டு பி.பி.மண்டல் தலைமையில் பிற்படுத்தப்பட்டோர் நிலை குறித்து ஆராய ஆணையம் அமைக்கப்பட்டது. 1980ஆம் ஆண்டு பி.பி. மண்டல் அவர்கள் அறிக்கை கொடுத்தாலும் அது அமல்படுத்தப்படவில்லை. பிரதமர் வி.பி.சிங் அவர்கள் 1990ஆம் ஆண்டு மண்டல் ஆணையத்தின் பரிந்துரைகளை அமல்படுத்த அழுத்தம் கொடுத்தவரும் தலைவர் கலைஞர் அவர்கள்தான். தமிழ்நாடு சட்டப்பேரவையில் இதற்காக தீர்மானமே நிறைவேற்றி வலியுறுத்தினார்.

**1980ஆம் ஆண்டு பி.பி.மண்டல் அவர்கள் அறிக்கை கொடுத்தாலும் அது அமல்படுத்தப்படவில்லை. பிரதமர் வி.பி.சிங் அவர்கள் 1990ஆம் ஆண்டு மண்டல் ஆணையத்தின் பரிந்துரைகளை அமல்படுத்த அழுத்தம் கொடுத்தவரும் தலைவர் கலைஞர் அவர்கள்தான். தமிழ்நாடு சட்டப்பேரவையில் இதற்காக தீர்மானமே நிறைவேற்றி வலியுறுத்தினார்.**

பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களுக்கு, ஒன்றிய அரசு கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் 27 விழுக்காடு இட ஒதுக்கீடு கிடைத்தது.

## சமூக நீதி வழங்கிய வி.பி.சிங் அரசை பா.ஜ.க. கவிழ்த்தபோது ஆர்.எஸ்.எஸ். எங்கே போனது?

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு சமூகநீதி அளித்த அந்தக் காரணத்திற்காகவே, அன்றைய தினம் வி.பி.சிங் அவர்களின் ஆட்சியை பா.ஜ.க. கவிழ்த்தது என்பதையும் உங்களுக்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன். இப்படி தொடர்ச்சியாக சமூகநீதியை நிலைநாட்ட நாம் போராடி வந்தாலும் - சமூகநீதிக்கான தடைகளும் விழவே செய்கின்றன. இதில் பா.ஜ.க. பெரிய அளவிலான தடுப்புச் செயல்களைச் செய்து வருகிறது.

**தேர்தல் வருவதால் - விளிம்பு நிலை மக்களை ஏமாற்ற ஆர்.எஸ்.எஸ். நாடகம்!**

சமூகநீதியை முறையாக பா.ஜ.க. அமல்படுத்துவது இல்லை. கடந்த 9 ஆண்டுகாலத்தில் ஒன்றிய அரசின் துறைகளில் பிற்படுத்தப்பட்டோருக்கான 27 விழுக்காடு ஒதுக்கீடு முழுமையாக வழங்கப்படவில்லை. ஏழை எளிய பிற்படுத்தப்பட்ட - பட்டியலின - பழங்குடியின மக்கள் முன்னேறுவதை பா.ஜ.க. விரும்பவில்லை. எனவேதான் அவர்கள் சமூகநீதிக்கு எதிராக இருக்கிறார்கள். திடீரென்று ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் அவர்கள், இடஒதுக்கீட்டுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்துள்ளார். இந்த நேரத்தில் நாம் கேட்க வேண்டியது, பிற்படுத்தப்பட்டோருக்கு சமூகநீதி வழங்கிய வி.பி.சிங் ஆட்சியைக் கவிழ்த்த போது, இதே ஆர்.எஸ்.எஸ் எங்கே போயிருந்தது? அன்றைக்கு ஆட்சியைக் கவிழ்த்த பா.ஜ.க.வை பின்னால் இருந்து இயக்கியது இதே ஆர்.எஸ்.எஸ். தானே? எனவே, நாடாளுமன்றத் தேர்தல் வரப்போவதால் விளிம்புநிலை மக்களை ஏமாற்றுவதற்கு இப்போது மோகன் பகவத் இப்படி சொல்கிறாரே தவிர, உள்ளார்ந்த ஈடுபாடு காரணமாக அவர் சொல்லவில்லை.

பா.ஜ.க.வுக்கு உண்மையிலேயே சமூகநீதியில் அக்கறை இருக்குமானால், 9 ஆண்டுகால ஆட்சியில், ஒன்றிய அரசுப் பணியிடங்களில் 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டை முழுமையாகச் செயல்படுத்தியிருக்க வேண்டும். ஏன், ஒன்றிய அரசு அலுவலகங்களில் காலிப்பணியிடங்கள் அனைத்தையும் சமூகநீதி அடிப்படையில் அவர்கள் நிரப்ப வேண்டும். அதனைச் செய்வார்களா? சமூகநீதி என்பது ஒரு மாநிலத்தின் பிரச்சினை அல்ல. அனைத்து மாநிலங்களின் பிரச்சினை. குறிப்பாக பா.ஜ.க. ஆட்சியில் இருக்கும்போது இது அகில இந்தியாவிற்கும் பொதுவான பிரச்சினை.

**புறக்கணிப்பு, தீண்டாமையை முறியடிக்கும் மருந்து சமூகநீதி!**

ஒவ்வொரு மாநிலத்துக்கும் சாதி வகுப்பு அளவீடுகள் வேறுபடலாம். எடுத்துக்காட்டாக, தமிழ்நாட்டில் 69 விழுக்காடு இடஒதுக்கீடு செயல்பாட்டில் இருக்கிறது. அதேபோல் ஒவ்வொரு மாநிலத்திலும் இடஒதுக்கீடு வெவ்வேறு விழுக்காடாக இருந்தாலும், பிரச்சினை ஒன்றுதான். அதுதான் புறக்கணிப்பு. எங்கெல்லாம் புறக்கணிப்பு - ஒதுக்குதல் - தீண்டாமை - அடிமைத்தனம் - அநீதி இருக்கிறதோ அங்கெல்லாம் அதனை முறிக்கும் மருந்தாக இருப்பதுதான் சமூகநீதி.

பட்டியலின பழங்குடியின மக்களின் இட ஒதுக்கீடு முறையாக வழங்கப்பட வேண்டும். பிற்படுத்தப்பட்டோர் - மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு முறையாக வழங்கப்பட வேண்டும். இவற்றை அகில இந்திய ரீதியில் கண்காணிக்க வேண்டும். சமூகரீதியாகவும் கண்காணிக்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததும், ஆதிதிராவிடர் பழங்குடியினர் ஆணையத்தை அமைத்தது. சமூகநீதி ஆணையத்தை அமைத்தது. சமூக நீதி கண்காணிப்புக் குழுவை அமைத்தது. இந்தக் கண்காணிப்புக் குழு, கல்வி, வேலை வாய்ப்பு, பதவிகள், பதவி உயர்வுகள், நியமனங்கள் ஆகியவற்றில் சமூகநீதி அளவுகோல், முறையாக முழுமையாகப் பின்பற்றப்படுகிறதா என்பதைக் கண்காணிக்கும். வழிகாட்டும். செயல்படுத்தும். இவை சரியாக நடைமுறைப்படுத்தப்படாவிட்டால், உரிய நடவடிக்கை எடுக்க அரசுக்குப் பரிந்துரை செய்யும். இதுபோல அனைத்து மாநிலங்களிலும் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். அகில இந்திய அளவில் இந்தக் குழு நிச்சயம் அமைக்கப்பட வேண்டும்.

இந்தக் கூட்டத்தின் வாயிலாக நிறைவேற்றப்பட இருக்கும் தீர்மானங்களை நாம் அனைவரும் இணைந்து முன்னெடுக்க வேண்டும்.

**நீதிபதிகள் நியமனங்களில் இட ஒதுக்கீடு கட்டாயம் தேவை!**

*** உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகள் பதவிக்கான நியமனங்களில் அட்டவணை சாதிகள், பட்டியலிடப்பட்ட பழங்குடியினர், ஓ.பி.சி.க்கள், பெண்கள் மற்றும் சிறுபான்மையின ருக்கு இடஒதுக்கீட்டை கட்டாயமாக்குவதற்குத் தேவையான அரசியலமைப்புத் திருத்தங்களை ஒன்றிய அரசு கொண்டுவர வேண்டும்.**

*** பதவி உயர்வு மற்றும் பணிமூப்பு நிர்ணயம் ஆகியவற்றில் OBCகளுக்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும்.**

*** 2015இல் சேகரிக்கப்பட்ட சமூகப் பொருளாதார சாதி கணக்கெடுப்புத் தரவை ஒன்றிய அரசு உடனடியாக வெளியிட வேண்டும்.**

***SC/ST/OBCகளுக்கான விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம் மற்றும் இடஒதுக்கீடுகளை ஆராய வேண்டும்.**

*** அரசின் கல்வி, வேலை வாய்ப்புகளில் தரப்படும் இடஒதுக்கீட்டை தனியார் வேலை வாய்ப்பிலும் பின்பற்ற வேண்டும்.**

*** மத்திய பல்கலைக்கழகங்கள், I.I.Tகள் , I.I.Mகளில் OBC, SC & ST சமூகங்களைச் சேர்ந்த பேராசிரியர்களை விகிதாச்சார முறையில் நியமனம் செய்ய வேண்டும்.**

*** I.I.T, I.I.M மற்றும் I.I.S.C போன்ற முதன்மையான கல்வி நிறுவனங்களுக்கான சேர்க்கைகளில் ஓ.பி.சி, எஸ்.சி மற்றும் எஸ்.டி மாணவர்களுக்கு விகிதாசாரப்படி உரிய முன்னுரிமை அளிக்க வேண்டும்.**

*** SC/ST/OBC ஊழியர்கள் மற்றும் பணியாளர்களின் குறைகளைத் தீர்ப்பதற்கு ஒரு சமூகநீதிக் குழு இருக்க வேண்டும்.**

***50 விழுக்காடு என்றுள்ள இடஒதுக்கீடு உச்சவரம்பு நீக்கப்பட வேண்டும்.**

***தமிழ்நாட்டில் உள்ளது போல், ஒன்றிய அளவில், ஒன்றிய அரசின் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் இடஒதுக்கீடு முழுமையாகச் செயல்படுத்தப்படுவதை உறுதிசெய்திட, அகில இந்திய அளவில் சமூகநீதிக் கண்காணிப்புக் குழுவினை நியமிக்க வேண்டும்.**

இவை உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவை அனைத்தையும் செயல்படுத்திக் காட்ட வேண்டும். அதிலும் குறிப்பாக, மிக முக்கியமாக இட ஒதுக்கீடு வழங்கும் அதிகாரம் மாநிலங்களிடம் இருக்க வேண்டும்.

**'இட ஒதுக்கீடு' மாநிலங்களின் உரிமை!**

தமிழ்நாடு மாநிலத்தில் 69 விழுக்காடு இட ஒதுக்கீடு உறுதி செய்யப்பட்டது. சில மாநிலங்களில் 50 விழுக்காடு உள்ளது. அந்தந்த மாநிலங்களின் மக்கள் விகிதாச்சாரம் அடிப்படையில் வழங்கப்பட வேண்டும். எனவே, 50 விழுக்காட்டுக்கு மேல் இடஒதுக்கீடு அளவீடு போகக் கூடாது என்று சொல்வதும் சரியல்ல. "இடஒதுக்கீடு" மாநிலங்களின் உரிமை என்று அதிகாரத்தை மாற்றி வழங்கினால்தான், அந்தந்த மாநிலங்கள் தங்கள் மாநில மக்களுக்கு உரிய இடஒதுக்கீட்டினை வழங்க முடியும்.

**மக்கள் சமூகநீதிப் பெருவாழ்வு வாழப் பாடுபடுவோம்!**

இந்தியாவில் உண்மையான கூட்டாட்சிக் கருத்தியல் மலர்ந்தாக வேண்டும். நாம் மேற்கண்ட "சமூகநீதி" தீர்மானங்களுக்குச் செயல் வடிவம் கொடுக்க உழைப்போம். இந்திய நாட்டு மக்கள் அனைவரும் சமூகநீதிப் பெருவாழ்வு வாழப் பாடுபடுவோம். நன்றி! வணக்கம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் சார்பில், நேற்று முன்தினம் (19.09.2023) சென்னை, எழும்பூர், சிப்காட் தலைமை அலுவலகத்தில், "நிறுவனங்களின் நாயகர் – கலைஞர் தொழில்துறையில் முன்னெடுக்கப்பட்ட முக்கிய தொகுப்புகளின் புகைப்படங்களை கொண்ட புகைப்பட மாடத்தை இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் திறந்து வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண்ராய், சிப்காட் மேலாண்மை இயக்குநர் திருமதி எ.சுந்தரவல்லி, டிட்கோ மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், சிப்காட் செயல் இயக்குநர் பி.ஆகாஷ், டிட்கோ செயல் இயக்குநர் ஜெயசந்திர பானு ரெட்டி, மற்றும் சிப்காட் நிறுவன உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நாடாளுமன்றத் தேர்தல் தோல்வி பயத்தில் சட்டம் இயற்றும் பா.ஜ.க.வின் தந்திரம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிக்கை... முதல் பக்கத் தொடர்ச்சி

இந்தத் தேர்தலில் முக்கியமானது என்னவென்றால் தமிழ்நாட்டில் உள்ளாட்சித் தேர்தல்களில் முதல் முறையாக பெண்களுக்கு இடஒதுக்கீடு செய்யப்பட்டுத் தேர்தல் நடத்தப்பட்டதுதான். மொத்தமுள்ள ஆறு மாநகராட்சிகளில் திருச்சி மாநகராட்சி மேயர் பதவி பெண்களுக்காக ஒதுக்கப்பட்டது. திருநெல்வேலி மாநகராட்சி பட்டியலின வகுப்பைச் சேர்ந்த பெண்களுக்காக ஒதுக்கப்பட்டது.

மொத்தம் 474 மாநகராட்சி வார்டுகளில் பெண்களுக்கு 161 என்றும் பட்டியலின வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு 35 என்றும் - மாவட்டப் பஞ்சாயத்து தலைவர் பதவிகள் மொத்தம் 28-இல் பெண்களுக்கு 10 என்றும் பட்டியலின வகுப்பைச் சேர்ந்தவர்க்கு 4 என்றும் - மாவட்டப் பஞ்சாயத்து வார்டுகள் பதவிகள் மொத்தம் 649-இல் பெண்களுக்கு 242 என்றும் பட்டியலின வகுப்பைச் சேர்ந்தவர்க்கு 97 என்றும் - நகராட்சித் தலைவர்கள் பதவிகள் மொத்தம் 106-இல் பெண்களுக்கு 35 என்றும், பட்டியலின வகுப்பைச் சேர்ந்தவர்க்கு 6 என்றும் இப்படியே ஒவ்வொரு பதவியிலும் பெண்களுக்கு 33 விழுக்காடு என்ற அளவிற்குத் தொகுதிகள் பிரிக்கப்பட்டன. அதுதான் இன்று 50 விழுக்காடாக உயர்ந்துள்ளது. உள்ளாட்சி அமைப்புகள் இவ்வளவு பெண்கள் அதிகாரம் பொருந்திய இடங்களுக்கு வந்து, தங்களது நிர்வாகத் திறனை மெய்ப்பித்துக் காட்டி வருகிறார்கள். இதையே நாடாளுமன்ற, சட்டமன்றங்களும் வழங்க வேண்டும் என்றும் தி.மு.க. தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது.

சுமார் 27 ஆண்டுகளாக இந்த மசோதா நிலுவையில் உள்ளது. 1996-ஆம் ஆண்டு தி.மு.க. அங்கம் வகித்த ஒன்றிய அரசில் மகளிர் இடஒதுக்கீடு மசோதா முதன்முதலாக தாக்கல் செய்யப்பட்டது. 2005-ஆம் ஆண்டும் தி.மு.க. இடம்பெற்ற ஒன்றிய அரசு இதனைத் தாக்கல் செய்தது. முதலில் ஆதரிப்பதாகச் சொன்ன பா.ஜ.க. எதிர்த்தது. பா.ஜ.க. பெண் உறுப்பினரான உமா பாரதியே இதனைக் கடுமையாக எதிர்த்தார். கடந்த காலத்தில் இதை எதிர்த்தவர்களில் தற்போதைய உ.பி. முதல்வர் யோகி ஆதித்யநாத்தும் முக்கியமானவர்.

**ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் நிறைவேறிய மசோதா!**

காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட கட்சிகளின் நீண்ட நாள் முயற்சியின் விளைவாக ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் 2010-ஆம் ஆண்டு மகளிர் தினமான மார்ச் 8-ஆம் தேதி நாடாளுமன்ற மாநிலங்களவையில் மகளிர் இடஒதுக்கீடு மசோதா தாக்கல் செய்யப்பட்டு மறுநாள் நிறைவேற்றப்பட்டது. மக்களவையில் சில கட்சிகளின் எதிர்ப்பின் காரணமாக நிறைவேற்றப்படவில்லை. அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த பா.ஜ.க. அரசு அந்த மசோதாவைக் கிடப்பில் போட்டுவிட்டது. 2014-ஆம் ஆண்டும், 2019-ஆம் ஆண்டும் நடந்த தேர்தல்களில் பெரும்பானையைப் பெற்றது பா.ஜ.க. அரசு. நினைத்திருந்தால் அவர்கள் அதனை உடனடியாக நிறைவேற்றி இருக்கலாம். ஆனால் செய்யவில்லை.

**கனிமொழி எம்.பி. தலைமையில் டெல்லியில் நடந்த பேரணி!**

2017ஆம் ஆண்டு தி.மு.க சார்பில் மகளிரணிச் செயலாளரும், அப்போதைய மாநிலங்களவை உறுப்பினருமான கனிமொழி தலைமையில் டெல்லியில் பேரணி நடத்தினோம். 33 விழுக்காடு இடஒதுக்கீட்டை அமல்படுத்த வலியுறுத்தி இந்தப் பேரணி நடத்தப்பட்டது. மகளிர் மசோதாவை நிறைவேற்ற வேண்டும் என்று கடந்த சனிக்கிழமை நடந்த தி.மு.க. எம்.பி.கள் கூட்டத்திலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் 9 ஆண்டுகளாக அதிக பெரும்பான்மை உள்ள பா.ஜ.க. அரசு அதனைக் கண்டு கொள்ளவில்லை.

உலகளாவிய பாலின இடைவெளி அறிக்கை 2022-இன் படி 146 நாடுகளின் பட்டியலில் இந்தியா 48-ஆவது இடத்தில் உள்ளது. இந்திய நாடாளுமன்றத்திலும் சட்டமன்றங்களிலும் பெண்கள் மிகக் குறைவான அளவிலேயே இருக்கிறார்கள். நாடாளுமன்ற சட்டமன்றங்களில் பெண்களுக்கு அதிகாரமளித்தல் மூலமாக இதனைச் சரி செய்ய முடியும். அந்த வகையில் 33 விழுக்காடு இடஒதுக்கீடு அமல்படுத்தப்பட வேண்டும்.

## மக்கள் தொகை கணக்கெடுப்பு எப்போது என்ற உத்தரவாதமின்றி மகளிர் மசோதாவை கொண்டு வருவதா?

**பிரச்சினைகளை திசை திருப்ப பா.ஜ.க.வின் கண்துடைப்பு நாடகமா?**

பிரதமர் ராஜீவ்காந்தி அவர்கள், உள்ளாட்சி அமைப்புகளில் இடஒதுக்கீட்டை உறுதி செய்தார். நாடாளுமன்ற - சட்டமன்றங்களுக்கான இடஒதுக்கீட்டு மசோதாவை மாநிலங்களவையில் தாக்கல் செய்து வெற்றி பெற வைத்தார் பிரதமர் மன்மோகன் சிங். இவர்கள் இருவரது சாதனைகளும் இப்போது நினைவு கூரப்பட வேண்டியவை ஆகும்.

**தமிழ்நாட்டின் மீது - தென்னிந்தியாவின் மீது தலைக்கு மேல் தொங்கும் கத்தியாக தொகுதி மறுவரையறை (delimitation) உள்ளது. மக்கள் தொகை அடிப்படையில், நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்து, தென்னிந்தியாவின் அரசியல் பிரதிநிதித்துவத்தை குறைக்கிற அரசியல் சூழ்ச்சி முறியடிக்கப்பட வேண்டும். அரசியல் விழிப்புமிக்க தமிழ்நாட்டை வஞ்சிக்கிற அநீதியான முயற்சி முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டும்.**

காலம் கடந்து செய்தாலும், கண்துடைப்புக்காகச் செய்தாலும், இப்போதைய பிரச்சினைகள் அனைத்தையும் திசைதிருப்பச் செய்தாலும், ஒன்றிய அரசு கொண்டு வரும் மகளிருக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கும் மசோதாவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வரவேற்கிறேன். ஆதரிக்கிறேன்.

பிற்படுத்தப்பட்ட - மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயப் பெண்களுக்குப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்ற கோரிக்கையை புறந்தள்ளாமல், அதன் நியாயத்தை பரிசீலிக்குமாறு ஒன்றிய ஆட்சியாளர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தாமல் மகளிருக்கு சட்டம் இயற்றும் விசித்திரம்!**

பத்தாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பை இன்னும் நடத்தாத ஒரே நாடு இந்தியா. எப்போது நடைபெறும் என்ற உத்தரவாதத்தையும் இதுவரை பா.ஜ.க. அரசு தரவில்லை. எப்போது நடைபெறும் என்று தெரியாத மக்கள்தொகை கணக்கெடுப்பு, அதன் அடிப்படையில் நடக்கவுள்ள தொகுதி மறுவரையறை - அதன் பேரில் 2029 தேர்தலில் நடைமுறைக்கு வரும் மகளிர் ஒதுக்கீட்டுக்கு இப்போது சட்டம் இயற்றும் விசித்திரம் பா.ஜ.க.வால் அரங்கேற்றப்படுகிறது.

தமிழ்நாட்டின் மீது - தென்னிந்தியாவின் மீது தலைக்கு மேல் தொங்கும் கத்தியாக தொகுதி மறுவரையறை (delimitation) உள்ளது. மக்கள் தொகை அடிப்படையில், நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்து, தென்னிந்தியாவின் அரசியல் பிரதிநிதித்து வத்தை குறைக்கிற அரசியல் சூழ்ச்சி முறியடிக்கப்பட வேண்டும். அரசியல் விழிப்புமிக்க தமிழ்நாட்டை வஞ்சிக்கிற அநீதியான முயற்சி முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டும்.

**மறுவரையறை என்ற பெயரில் தென்னிந்திய மக்களுக்கு தீங்கு கூடாது!**

மகளிர் மசோதாவை வரவேற்கும் அதே வேளையில், மறுவரையறை என்ற பெயரில் தென்னிந்திய மக்களுக்கு எந்தத் தீங்கையும் செய்துவிட மாட்டோம் என்ற உத்தரவாதத்தை வழங்கி, தென்னிந்திய மக்களை ஆட்கொண்டுள்ள அச்சத்தைப் போக்கிட வேண்டும் எனப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

கவிஞர் தமிழ்ஒளிக்கு சிலை! மாணவர்களுக்கு பரிசுகள் அறிவித்த

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

### கவிஞர் தமிழ்ஒளி நூற்றாண்டு விழாக்குழு அறிவிப்பு!

சென்னை, செப்.21-

முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு கவிஞர் தமிழ்ஒளி நூற்றாண்டு விழாக் குழு நன்றி தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

கவிஞர் தமிழ்ஒளி அவர்களுக்கு தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் மார்பளவு சிலை மற்றும் பள்ளி மாணவர்களின் தமிழ் ஆர்வத்தினை ஊக்குவிக்கும் வகையில் கவிஞர் தமிழ்ஒளி பெயரில் பரிசுகள் வழங்கப்படும் என்று அறிவித்த முதல் அமைச்சர் அவர்களுக்கு கவிஞர் தமிழ்ஒளி நூற்றாண்டு விழாக் குழு சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

கவிஞர் தமிழ்ஒளி அவர்களின் நூற்றாண்டினை முன்னிட்டு கவிஞர் தமிழ்ஒளி அவர்களுக்கு தஞ்சாவூரிலுள்ள தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் மார்பளவு சிலை அமைக்கப்படும். மேலும் பள்ளி மாணவர்களின் தமிழ் ஆர்வத்தினை ஊக்குவிக்கும் வகையில் 50 இலட்சம் ரூபாய் வங்கியில் வைப்புத் தொகையாக செலுத்தி, கிடைக்கப் பெறும் வட்டித் தொகையிலிருந்து ஆண்டுதோறும் தமிழ் வளர்ச்சித் துறையின் மூலம் தமிழ் சார்ந்த போட்டிகள் நடத்தி கவிஞர் தமிழ்ஒளி பெயரில் பரிசுகள் வழங்கப்படும் என்று தமிழ் நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

சமத்துவ சமூகம் மலர வேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோளுடன் தனது படைப்புகளை உருவாக்கிய சமதர்ம கவிஞர் தமிழ்ஒளி அவர்களின் நூற்றாண்டில் அவரின் புகழ் நிலைக்க வும் அவரின் படைப்புகளை அனைவரும் அறிந்திட வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் முதல் அமைச்சர் அவர்களுக்கு நூற்றாண்டு விழாக் குழு தனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு கவிஞர் தமிழ்ஒளி நூற்றாண்டு விழாக் குழு 'சிகரம்' ச. செந்தில்நாதன் - தலைவர், இரா.தெ.முத்து - செயலாளர், வே.மணி - பொருளாளர் ஆகியோர் அறிவித்துள்ளனர்.

---

முரசொலி துணை ஆசிரியராகப் பணிபுரியும்

## எஸ்.சுந்தரமூர்த்தியின் சகோதரர் எஸ்.மணிவாசகன் மறைவு!

வேலூர், செப். 21-

முரசொலியில் துணை ஆசிரியராகப் பணிபுரியும் எஸ்.சுந்தரமூர்த்தியின் இளைய சகோதரர் எஸ். மணிவாசகன் அவர்கள் (வயது 65) உடல் நலக் குறைவின் காரணமாக வேலூர் அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று (20.09.2023) காலை இயற்கை எய்தினார் என்பதனை அறிவிக்க வருந்துகிறோம்.



செய்தியறிந்ததும் கழகத்தினர், உறவினர்கள், நண்பர்கள் மறைந்த மணிவாசகன் அவர்களின் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் நேற்று அவரது சொந்த ஊரான ஆர்க்காட்டில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு ஆர்க்காட்டில் உள்ள இடுகாட்டில் இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.

---




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் – கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகையை முன்னிட்டு நடைபெற்ற தருமபுரி கிழக்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டத்தில் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி சிறப்புரை ஆற்றினார். கூட்டத்தில் மாவட்டக் கழக பொருளாளர் வே.தங்கமணி, மாநில செயற்குழு உறுப்பினர் எம்.ஜி. சேகர், மாவட்ட துணைச் செயலாளர்கள் உமாசங்கர், ரேணுகாதேவி, ஆறுமுகம் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர நிர்வாகிகள், இளைஞர் அணியினர் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.

---

நாமக்கல் மாவட்டம் வெண்ணந்தூர் ஒன்றியத்தில்

## 8 ஊராட்சிகளில் ரூ.2.04 கோடி மதிப்பில் திட்டப்பணிகள்!

### அமைச்சர் மா.மதிவேந்தன் துவக்கி வைத்தார்!

நாமக்கல், செப். 21 -

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அருகேயுள்ள வெண்ணந்தூர் ஊராட்சிக்குட்பட்ட கட்டனாச்சம்பட்டி, மூலக்காடு, ஆலாம்பட்டி, பழந்தின்னிப்பட்டி, மாட்டுவேலம்பட்டி, அக்கரைப்பட்டி, மதியம்பட்டி மற்றும் தொட்டிப்பட்டி ஆகிய 8 ஊராட்சிகளில் ரூ. 2.04 கோடி மதிப்பீட்டில் 22 புதிய திட்டப் பணிகளுக்கு தமிழக வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியம், கட்டனாச்சம்பட்டி ஊராட்சியில் ஜல் ஜீவன் மிஷன் திட்டம் 2023 24 கீழ், அத்தி ப்பல கானூர் கிராமத்தில் ரூ.16.75 லட்சம் மதிப்பீட்டில் 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைக்கும் பணி, மூலக்காடு ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2023 24 கீழ், அம்மன் நகர் மெயின் வீதி மற்றும் முதல் குறுக்கு வீதியில் ரூ.20.23 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, சேது நகர் குறுக்கு வீதியில் 5.95 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, மசக்காளிப்பட்டி எரங்காடு குறுக்கு வீதியில் ரூ.3.56 லட்சம் மதிப்பில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, போயர் தெருவில் ரூ.9.37 லட்சம் மதிப்பீட்டில் கழிவு நீர் கால்வாய் அமைக்கும் பணி, ஆலம்பட்டி ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2023 24 கீழ், அருந்ததியர் தெரு மகளிர் சுய உதவி குழு கட்டடம் முதல் மதுரை வீரன் கோவில் வரை ரூ.8.47 லட்சம் மதிப்பீட்டில் புதிய சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி உள்ளிட்ட பழந்தின்னிப்பட்டி, மாட்டுவேலம்பட்டி, அக்கரைப் பட்டி, மதியம் பட்டி உள்ளிட்ட ஊராட்சிகளில் ரூ.2.04 கோடி மதிப்பீட்டில் 22 புதிய திட்டப்பணி களை அமைச்சர் தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து, வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியம், தொட்டிப்பட்டியில் நடைபெற்று வரும் கலைஞரின் வரும் முன் காப்போம் மருத்துவ முகாமில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச் சத்து பெட்டகங்களையும் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றி யக்குழு உறுப்பினர் ஆர்.எம்.துரைசாமி உள்ளிட்ட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

கடலூர் கிழக்கு மாவட்ட

## கழக மகளிர் அணி, தொண்டரணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரை!

கடலூர், செப். 21-

கடலூர் கிழக்கு மாவட்ட கழக மகளிரணி, மகளிர் தொண்டரணி அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம், சிதம்பரம், அறுபத்து மூவர் திருமண மண்டபத்தில், மாலை 4.30 மணியளவில், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் அமுதராணி தலைமையில் நடைப்பெற்றது. மாவட்ட துணை செயலாளர் சுதா சம்பத் வரவேற்புரையாற்றினார்.

கடலூர் மேயர் சுந்தரி ராஜா, பொதுக்குழு உறுப்பினர் மஞ்சுஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்கே. பன்னீர்செல்வம் கலந்துக் கொண்டு சிறப்புரையாற்றினர்.

கடலூர் மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா, ஒன்றிய கழகச் செயலாளர்கள் அ.முத்துசாமி முத்து.பெருமாள், கே.ஆர்.ராயர், வி.ஜி.பி.சபாநாயகம், ஆர்.கலையரசன், டாக்டர் எம்.மனோகரன், எம். சோழன், சின்னசாமி, சங்கர், ராஜேந்திரன், மணிவண்ணன், பொதுக் குழு உறுப்பினர்கள் கே.பி.ஆர்.பாலமுருகன், ஜேம்ஸ் விஜயராகவன், பேரூர் கழக செயலாளர்கள் கணேசமூர்த்தி கிள்ளை ரவி, பழனி, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் அப்பு சந்திரசேகர், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி ஜாஃபர் அலி, குறிஞ்சிப்பாடி பேரூராட்சி தலைவர் கோகிலா குமார்,

மகளிர் அணி தலைவர் லதா, துணை அமைப்பாளர்கள் வெ.மலர்விழி, செ.சங்கீதா, இரா.கௌரி, ஆ.ஜீவா, சோ.லதா, மகளிர்தொண்டரணி தலைவர் பெ.குமாரி, பு.ஜெயசுதா, அமைப்பாளர் மனோரஞ்சிதம், துணை அமைப்பாளர்கள் அ.தரணி, கா.காயத்ரி, த.ராஜகுமாரி, பா.விஜயலட்சுமி, ரா.சாந்தி ராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருப்பத்தூர் கோ. சண்முகம்

செப்டம்பர் 21 (2002)



திருப்பத்தூர் நகரச் செயலாளர், மாவட்டக் கழக துணைச் செயலாளர், தமிழக சட்டமன்ற உறுப்பினர் ஆகிய பொறுப்புகளில் சிறப்புற பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்பு, இலங்கைத் தமிழர் பாதுகாப்பு உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



முன்னாள் சட்டப்பேரவை தலைவர்
முன்னாள் ஒன்றிய அமைச்சர்
எங்கள் குடும்பத்தலைவர்

# சேடபட்டி இரா.முத்தையா M.Sc., அவர்களின்

## முதலாம் ஆண்டு நினைவேந்தல்

நிகழ்வு சொந்த ஊரான முத்தப்பன்பட்டி கிராமத்தில்
காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும்
என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

**21 செப்டம்பர் 2023**

*குடும்பத்தினர்கள்*

**சகுந்தலா முத்தையா**
**சு.தமிழ்செல்வி - Dr.இரா.சுபாஷ்சந்திரபோஸ்**
**வி.மலர்விழி - சு.விஜயராஜன்**
**மு.மணிமாறன் - ம.பாரதி**


கழக மூத்த முன்னோடிகளுக்கு
பொற்கிழி வழங்கும் விழா
சேடபட்டியார் அவர்களின்
முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்விற்கு
வருகை தரும்
நாள் : 21.09.2023 இடம் : முத்தப்பன்பட்டி
இருளகற்றும்
உதயமே
எளியவர்
இதயமே
வருக! வருக!!
P.மூர்த்தி
மதுரை வடக்கு மாவட்ட கழக செயலாளர்
வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்
கோ.தளபதி MLA
மதுரை மாநகர் மாவட்ட கழக செயலாளர்
மு.மணிமாறன்
மதுரை தெற்கு மாவட்ட கழக செயலாளர்
மதுரை தெற்கு மாவட்ட திமுக
SM FLEX
99439 88999, 97903 64550


கழக முன்னோடிகளுக்கு
பொற்கிழி வழங்கும் விழா
நாள்: 21.09.2023, வியாழக்கிழமை
இடம்: முத்தப்பன்பட்டி, மதுரை
கழக முன்னோடிகளுக்கு
பொற்கிழி வழங்கவும்
முன்னாள் சபாநாயகர்
சேடபட்டி இரா.முத்தையா
அவர்களின் நினைவேந்தல்
நிகழ்வில் கலந்து
கொள்ள வருகைதரும்
கழக இளைஞர் அணிச் செயலாளர்
இளைஞர் நலன் (ம) விளையாட்டு
மேம்பாட்டுத்துறை அமைச்சர்
மாண்புமிகு
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக! வருக!!
P.மூர்த்தி
மாவட்ட கழகச் செயலாளர், மதுரை வடக்கு மாவட்டம்
வணிகவரி (ம) பத்திர பதிவுத்துறை அமைச்சர்
கோ.தளபதி
மதுரை மாநகர் மாவட்ட கழகச் செயலாளர்
மு.மணிமாறன்
மாவட்ட கழகச் செயலாளர், மதுரை தெற்கு மாவட்டம்
மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க


கலைஞர்
100
1924 - 2023
நாள் : 21 – 9 – 2023,
வியாழக்கிழமை
மதுரை மாநகர்
மாவட்டத்திற்கு வருகை தரும்
தோல்விகள் உம்மிடம்
தோல்வி அடைகின்றன!
வெற்றிகள் உம்
விலாசம் தேடுகின்றன......
கழக இளைஞர் அணிச் செயலாளர்
இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
மாண்புமிகு
உதயநிதிஸ்டாலின்
அவர்களே
வருக.. வருக...
மாண்புமிகு P.T.R. பழனிவேல் தியாகராஜன்
தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்
உயிருள்ளவரை
உங்கள் வழியில்....
அதலை செந்தில் M.A.
கழக மாணவர் அணி துணைச் செயலாளர்

பெண்களுக்கு சொத்தில் சம பங்கு வழங்கி சட்டம் இயற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர்

# மகளிருக்கு உரிமைத் தொகை வழங்கி பெருமை சேர்க்கிறார் முதல்வர்!

## ஆத்தூர் நிகழ்ச்சியில் அமைச்சர் இ.பெரியசாமி பேச்சு!



ஆத்தூர், செப். 21 - தமிழகத்தில் மகளிருக்கு சொத்தில் சரிபங்கு வழங்கி பெண் இனத்தை பாதுகாத்தார் முத்தமிழ் அறிஞர் கலைஞர். அவர் வழியில் இன்று மகளிருக்கு உரிமைத்தொகை வழங்கி பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துகிறார் திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்று சின்னாளபட்டியில் நடைபெற்ற கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம் தொடக்க விழாவில் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசியதோடு குடிசைகளை ஒழித்து வீடுகளை வழங்கி தொடர்ந்து பெண்களுக்கு இலவச எரிவாயு, இலவச கலர்டிவி, 100 நாள் வேலை திட்டம், சுய உதவி குழுக்களுக்கு கடனுதவி எண்ணற்ற நலத்திட்டங்களை தொலைநோக்கு பார்வையோடு செயல்படுத்தியவர் தமிழினம் போற்றும் ஒப்பற்ற தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஒருவரே என்று ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதமாக பேசினார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் தொடக்க விழா சின்னாளபட்டி தேவாங்கர் மேல்நிலைப்பட்டியில் நடைபெற்றது. விழாவிற்கு மாவட்ட ஆட்சியர் மொ.ந. பூங்கொடி தலைமை தாங்கினார். கோட்டாட்சியர் சுப கமலக்கண்ணன் வரவேற்று பேசினார். திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும் பழனி சட்டமன்ற உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார் திண்டுக்கல் எம்.பி.ப. வேலுச் சாமி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பாஸ்கரன், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மனோ ரஞ்சிதம், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் மு.பாஸ்கரன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் ஐ.பி.செந்தில்குமார், திண்டுக்கல் எம்.பி.ப.வேலுச்சாமி, திண்டுக்கல் மாவட்ட ஆட்சியாளர் மொ.ந.பூங்கொடி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்;து கொண்டு ஆத்தூர் தாலுகாவிற்கு உட்பட்ட 1676 பயனாளிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமை திட்டம் மூலம் வங்கிக்கான ஏ.டி.எம். கார்டுகளை வழங்கி விட்டு பயனாளிகள் மத்தியில் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசும்போது தமிழகத்தில் இந்நாள் ஒரு பொன்னான நாளாகும். காரணம் கழகத்தை தோற்றுவித்த பேரறிஞர் பெருமகனார் அண்ணாவின் பிறந்தநாளன்று தமிழினம் போற்றிய ஒப்பற்ற தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் வழியில் வந்த திராவிட மாடல் ஆட்சி நாயகன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மகளிருக்காக அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வண்ணம் செயல்படுத்தும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் உலகமே போற்றும்ஒப்பற்ற திட்டமாகும். காரணம்; கலைஞர்அவர்கள் 50 ஆண்டுகளுக்கு பிறகு தமிழகத்தில் பெண்களுக்கு சொத்தில் பங்கு உண்டு என்ற சட்டத்தை இயற்றினார். அதன்மூலம் பெண்களும் சரிசமம் என்ற நிலை உருவானது. அதற்கு முன்பாகவே தொலைநோக்கு பார்வையோடு குடிசைகளை ஒழித்து வீடுகளை கொண்டுவந்தார். பெண்களுக்கு இலவச எரிவாயு அடுப்பு வழங்குதல், கலர்டிவி, பெண்கள் சொந்தகாலில்நிற்பதற்காக சுய உதவி குழுக்களை உருவாக்கியதோடு அவர்களுக்கு கடனுதவி, கர்ப்பிணி பெண்களுக்கு நிதியுதவி, உட்பட எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தியதால் தமிழகத்தில் பெண் இனம் முன்னேற்றம் கண்டது. தமிழகத்தில் உள்ள 8 கோடி பேர்களில் சுமார் 2கோடியே 10 லட்சம் பேர் குடும்ப அட்டை வைத்துள்ளார்கள். அவர்களில் தகுதியானவர்களுக்கு இன்று வழங்கப்பட்டுள்ள மகளிர் உரிமைத்தொகை பயனுள்ளதாக உள்ளது. இந்தியாவே திரும்பி பார்க்கும் அளவிற்கு இந்த திட்டம் செயல்பட போகிறது. நிதி ஆதாரத்தை பற்றி கவலைபடாமல் பெண் இனத்தின் முன்னேற்றத்திற்காக திராவிட மாடல் ஆட்சி நாயகன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இத்திட்டத்தை பலத்த எதிர்ப்புகளுக்கிடையே செயல்படுத்தி இருப்பது பாராட்டுக்;குரியது. அடித்தட்டு மக்களை கருத்தில் கொண்டு அவர்களின் வாழ்வாதாரம் முன்னேற்றமடைய நலத்திட்டங்களை வாரி வாரி வழங்கி வருவது தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான மக்களுக்கான அரசு என்றதோடு தொடர்ந்து பெண்கள் முன்னேற்றத்திற்கான கல்வி, அரசுபணி, உட்பட பல நலத்திட்டங்களை சிறப்போடு செயல்படுத்தி வரும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் புகழ் என்றும் மக்கள் மனதில் நிலைத்திருக்கும் இது உறுதி என்றார். நிகழ்ச்சியில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, மாவட்ட துணை செயலாளர்கள் நாகராஜன், பிலால்உசேன், மார்கிரேட் மேரி, மாவட்டப் பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, திமுக தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் கோ.காந்திநாதன். ஒன்றிய செயலாளர்கள் ஆத்தூர் மேற்கு ஒன்றிய செயலாளர் பாறைப்பட்டி ராமன், கிழக்கு ஒன்றிய செயலாளர் முருகேசன், திண்டுக்கல் நெடுஞ்செழியன், வெள்ளிமலை, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கணேசன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கே. அஸ்வின் பிரபாகரன், திண்டுக்கல் மேயர் இளமதி ஜோதிபிரகாஷ், துணை மேயர் ராஜப்பா, ஆத்தூர் ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன், துணை பெருந்தலைவர் ஹேமலதா மணிகண்டன், வட்டாட்சியர்கள் ஆத்தூர் வடிவேல்முருகன், மீனாதேவி, ஆறுமுகம், சரவணன், பேரூராட்சி மன்ற தலைவர்கள் பிரதீபா, ரேகா ஐயப்பன், போதும்பொண்ணு முரளி, சின்னாளபட்டி பேரூராட்சி துணை தலைவர் ஆனந்தி, சின்னாளபட்டி பேரூராட்சி செயலர் அலுவலர் பெ.செல்வராஜ், மாவட்ட கவுன்சிலர்கள் சுப்புலெட்சுமி, பத்மாவதி, ஒன்றியக்குழு உறுப்பினர்கள் நாகவள்ளி, பாப்பாத்தி, முத்துமணிசேகர், காளீஸ்வரி மலைச்சாமி, சுமதி கணேசன், தேவாங்கர் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் காசிராஜன், தலைமை ஆசிரியர் ஞானசேகரன், பேரூர் கழக செயலாளர்கள்; மோகன், சக்திவேல், கன்னிவாடி இளங்கோவன், ஊராட்சி மன்ற தலைவர்கள் செட்டியபட்டி ராஜா, ஜாதிகவுண்டன்பட்டி கருப்பையா, சீவல்சரகு ராணி ராஜேந்திரன், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் ரபீக் மைதீன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் கும்மம்பட்டி விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, கதிரையன்குளம் பாலன், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் இந்திராணி திருநாவுக்கரசு, ஆத்தூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. அவைத்தலைவர் சிவக்குமார், துணை செயலாளர்கள் எம்.சி.பாண்டியன், வசந்தா கென்னடி, ராஜேந்திரன், பொருளாளர் கருப்பையா, சின்னாளபட்டி வருவாய் ஆய்வாளர் ஜான் பிரிட்டோ, மண்டல துணை வட்டாட்சியர் அந்தோணிசாமி, மற்றும் சின்னாளபட்டி நகர திமுக நிர்வாகிகள், பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள், கிளை செயலாளர்கள், உட்பட பலர் கலந்து கொண்டனர். நிறைவாக மாவட்ட வழங்கல் அலுவலர் ச.சிவக்குமார் நன்றி கூறினார்.


தமிழ்நாடு அரசு
செய்தி-மக்கள் தொடர்பு (விளம்பரம்)த் துறை
தலைமைச் செயலகம், சென்னை-9

தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998-ன் படி தமிழ்நாடு அரசின் சார்பில் செய்தி-மக்கள் தொடர்புத்துறை வெளியிடும் மாநில மற்றும் மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் (State and District Tender Bulletin) ஓர் ஆண்டு அச்சிடும் பணிக்கு இதே போன்று அரசு அல்லது அரசு சார்ந்த அமைப்புகளின் இதழ் அச்சிடும் பணியில் முன் அனுபவம் உள்ளவர்களிடமிருந்து மட்டும் 3.10.2023 பிற்பகல் 3.00 மணி வரை ஒப்பந்த விலைப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. 3.10.2023 மாலை 4.00 மணிக்கு மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலருக்கான ஒப்பந்த விலைப்புள்ளிகள் சென்னையில் இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, 9வது தளம், நாமக்கல் கவிஞர் மாளிகை, தலைமைச் செயலகம், சென்னை - 9 அவர்கள் அலுவலகத்தில் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

மாவட்டங்களில் ஒப்பந்த விலைப்புள்ளிகள் 38 மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்களின் அலுவலகங்களில் 3.10.2023 அன்று பிற்பகல் 3.00 மணி வரை பெறப்பட்டு அன்று மாலை 4.00 மணிக்கு ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்களால் திறக்கப்படும்.

மாநில ஒப்பந்தப்புள்ளி செய்திமலர் அச்சிடும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் மற்றும் இதர விபரங்கள் சென்னையில் "இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, 9வது தளம், நாமக்கல் கவிஞர் மாளிகை, தலைமைச் செயலகம், சென்னை - 600 009" என்ற பெயரில் வங்கியில் பெறப்பட்ட ரூ.100/- (ரூபாய் நூறு மட்டும்)க்கான (வரிகள் உட்பட) வங்கி கேட்பு வரைவோலையை (Demand Draft) நேரில் செலுத்தி பெற்றுக் கொள்ள வேண்டும்.

மாவட்டங்களை பொறுத்தமட்டில் மேலே குறிப்பிட்டுள்ள அந்தந்த **"மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலரின் பெயரில்"** (பதவியின் பெயரில்) வங்கியில் பெறப்பட்ட ரூ.100/- (ரூபாய் நூறு மட்டும்)க்கான (வரிகள் உட்பட) வங்கி கேட்பு வரைவோலையை (Demand Draft) நேரில் செலுத்தி பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளிக்கான முன்வைப்புத்தொகை (EMD) ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) 3.10.2023 அன்று பிற்பகல் 2.00 மணிக்கு ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் விற்பனை நிறுத்தப்படும். பணம் ரொக்கமாக பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.

செ.ம.தொ.இ./5121/ஒப்பந்தப்புள்ளி/2023 இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை




நாமக்கல் மாவட்டம் வெண்ணந்தூர் ஊராட்சிக்குட்பட்ட கட்டனாச்சம்பட்டி, மூலக்காடு, ஆலாம்பட்டி, பழந்தின்னிப்பட்டி, மாட்டுவேலம்பட்டி, அக்கரைப்பட்டி, மதியம்பட்டி மற்றும் தொட்டிப்பட்டி ஆகிய 8 ஊராட்சிகளில் ரூ. 2.04 கோடி மதிப்பீட்டில் 22 புதிய திட்டப் பணிகளுக்கு தமிழக வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர் ஆர்.எம்.துரைசாமி உள்ளிட்ட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பெண்கள் இட ஒதுக்கீடு மசோதா

# மோடி அரசு விரும்பினால் உடனடியாக நிறைவேற்றிட முடியும்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் தகவல்!

சென்னை, செப். 21 - ‘தினகரன்’ நாளேட்டின் நேற்றைய (20.09.2023) தலையங்கம் வருமாறு:


தினகரன்
பெண்கள் இடஒதுக்கீடு

நீண்ட நாட்களுக்கு பிறகு மீண்டும் ஒருமுறை பெண்கள் இடஒதுக்கீடு மசோதா நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது. இந்த முறை பிரதமராக மோடி இருக்கிறார். இரு அவைகளிலும் மசோதாவை நிறைவேற்றக்கூடிய பலம் பா.ஜ தலைமையிலான கூட்டணி அரசுக்கு இருக்கிறது. நினைத்தால் நினைத்த நொடி நேரத்தில் இந்த மசோதாவை நிறைவேற்றி விட முடியும். ஆனால் தள்ளிப் போடப்பட்டு இருக்கிறது. இப்படித்தான் காலங்காலமாக இந்த மசோதா தள்ளிப்போடப்பட்டு வந்துள்ளது.

பெண்களுக்கு இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று சிந்தித் தவர் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி. கடந்த 1987ல், ராஜிவ் பிரதமராக இருந்த போது பெண்களின் நிலையை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை வழங்க அப்போதைய அமைச்சர் மார்க்ரெட் ஆல்வா தலைமையில் 14 பேர் கொண்ட குழுவை அமைத்தார்.

அந்த குழுவின் பரிந்துரை அடிப்படையில் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இடஒதுக்கீடு வழங்குவதற்கான அரசியலமைப்பு திருத்த மசோதாவை ராஜிவ் காந்தி அறிமுகப்படுத்தினார். இந்த மசோதா மக்களவையில் நிறைவேற்ற ப்பட்டது. ஆனால் 1989ம் ஆண்டு செப்டம்பர் மாதம் மாநிலங்களவையில் இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்ட போது நிறைவேற்றப்படவில்லை.

1992ல் பிரதமர் பி.வி.நரசிம்ம ராவின் அரசு 73 மற்றும் 74வது அரசியலமைப்பு திருத்தச் சட்டங்களை நிறைவேற்றியது. இந்த பிரிவு மூலம் உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33.3 சதவீத இடஒதுக்கீட்டை கட்டாயமாக்கியது. அதை தொடர்ந்து நாடாளுமன்றம், சட்டமன்றங்களில் பெண்களுக்கான இடஒதுக்கீடு மசோதா முதன்முத லில் எச்.டி.தேவகவுடா தலைமையிலான அரசால், அரசியலமைப்பு 81வது திருத்த மசோதா 1996 என 11வது மக்களவையில் 1996ம் ஆண்டு செப்டம்பர் 12 அன்று அறிமுகப்படுத்தியது. பின்னர் அது நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் கூட்டுக் குழுவுக்கு அனுப்பப்பட்டது. ஆனால் 11வது மக்களவை கலைக்கப்பட்டவுடன் இந்த மசோதா காலாவதியானது.

அதை தொடர்ந்து 2010 மார்ச் 9ல் இந்திய அரசியலமைப்பில் அனைத்து இடங்களிலும் மூன்றில் ஒருபங்கு இடங்களை பெண்களுக்கு ஒதுக்க வழிவகை செய்யும் இடஒதுக்கீடு மசோதா நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் மீண்டும் தாக்கல் செய்யப்பட்டது. அன்று மாநிலங்களவையில் மசோதா நிறைவேறியது.

ஆனால் மக்களவையில் நிறைவேறவில்லை. தற்போது மீண்டும் மோடி அரசு புதிய நாடாளுமன்றத்தில் அறிமுக மசோதாவாக மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை மக்களவையில் தாக்கல் செய்துள்ளது. இந்த மசோதாவை மோடி விரும்பினால் உடனே நிறைவேற்ற முடியும். பெரும்பான்மை பலம் அவர்களுக்கு இருக்கிறது. ஆனால் மசோதா நிறைவேறுவதை தள்ளிப்போட்டு இருக்கிறார்கள். அதாவது மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிந்த பிறகுதான் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ள புதிய மகளிர் இட ஒதுக்கீடு மசோதா அமல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு 10 ஆண்டுகளுக்கும் ஒருமுறை பாரம்பரிய முறைப்படி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படும். இந்த முறை 2023ம் ஆண்டு முடிய உள்ள தருவாயில் கூட அதற்கான பணிகள் தொடங்கப்படவில்லை. அடுத்த ஆண்டு தேர்தல் முடிந்து இனி 2025ல் தான் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணி தொடங்க வாய்ப்பு உள்ளது. அப்படியானால் 2024 மக்களவை தேர்தலில் மகளிர் இட ஒதுக்கீடு அமல்படுத்தப்படாது என்பது தான் பிரதமர் மோடி தலைமையிலான அரசு கூறும் செய்தி.

இவ்வாறு ‘தினகரன்’ தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

அக்டோபர் 9ஆம் தேதி அன்று

# தமிழ்நாடு சட்டப் பேரவைக் கூட்டம்!

## பேரவைச் செயலாளர் அறிவிப்பு!

சென்னை,செப்.21- தமிழ்நாடு சட்டப் பேரவைக் கூட்டம் அக்டோபர் 9ஆம் தேதி அன்று தொடங்குகிறது என்று சட்டப் பேரவை செயலாளர் கி.சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் அடுத்தக் கூட்டத்தை, 2023ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள் 9-ஆம் நாள், திங்கட்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு, சென்னை - 600 009, தலைமைச் செயலகத்திலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் பேரவைத் தலைவர் அவர்கள் கூட்டியுள்ளார்கள்.

மேலும், அன்று 2023 - 2024ஆம் ஆண்டின் கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகள் (முதல்) பேரவைக்கு அளிக்கப் பெறும்.

இவ்வாறு பேரவை செயலாளர் கி.சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

கடலூர் மாவட்டம்

# பண்ருட்டியில் ரூ.100 கோடி மதிப்பிலான சொத்து மீட்பு!

## அறநிலையத்துறை நடவடிக்கை!

சென்னை, செப். 21 - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுத லின் படியும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவுறுத்தலின்படியும் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அதன்படி நேற்று முன்தினம் (19.09.2023) கடலூர் மாவட்டம், பண்ருட்டி நகர், வடகைலாசம், குருலட்சுமி அம்மாள் அறக்கட்டளைக்குச் சொந்தமான ரூ.100 கோடி மதிப்பீட்டிலான சொத்து மீட்கப்பட்டு அறக்கட்டளை வசம் சுவாதீனம் பெறப்பட்டுள்ளது.

கடலூர் மாவட்டம், பண்ருட்டி நகர், வடகைலாசம், குருலட்சுமி அம்மாள் அறக்கட்டளைக்குச் சொந்தமான ஒரு ஏக்கர் 80 சென்ட் வணிக மனை மற்றும் கட்டிடங்கள் பல்வேறு நபர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தது. இந்த ஆக்கிரமிப்பை அகற்றிட மண்டல இணை ஆணையர் நீதிமன்ற உத்தரவின்படியும், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் படியும், கடலூர் மண்டல இணை ஆணையர் ஜெ.பரணிதரன் தலைமையில் கடலூர் உதவி ஆணையர் (கூடுதல் பொறுப்பு) ஆர். முத்துராமன் முன்னிலையில் வருவாய்துறை காவல் துறை மற்றும் மின்சாரத் துறை அலுவலர்களின் உதவியோடு ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு அறக்கட்டளை வசம் சுவாதீனம் பெறப்பட்டது. மீட்கப்பட்ட வணிக மனைகள் மற்றும் கட்டிடங்களின் தற்போதைய சந்தை மதிப்பு ரூ.100 கோடியாகும்.

இந்நிகழ்வின்போது கடலூர் வருவாய் கோட்டாட்சியர் ச.அதியமான் கவியரசு, காவல்துறை துணை கண்காணிப்பாளர் சபியுல்லா, அரியலூர் உதவி ஆணையர் நாகராஜ், பண்ருட்டி வட்டாட்சியர் திருமதி ஆனந்தி, வட்டாட்சியர் (ஆலய நிலங்கள்) செந்தில்வேல், சிறப்பு பணி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உடனிருந்தனர்.


திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சேடப்பட்டி இரா. முத்தையா

செப்டம்பர் 21 (2022)



திராவிடக் கொள்கையில் தீவிர பற்றுக் கொண்ட இவர், தனது மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் இணைந்து தீவிர கழகப் பணியாற்றினார்.

மதுரையில் 1965ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

நான்குமுறை சட்டமன்ற உறுப்பினராகவும், இரண்டு முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றி, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர். அத்துடன் – தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவராகவும், ஒன்றிய அமைச்சராகவும் பொறுப்பு வகித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மா. மீனாட்சிசுந்தரம்

செப்டம்பர் 21 (2020)



1954ல் தனது 17வது வயதில் கழகத்தில் இணைத்துக் கொண்ட தீவிர சுயமரியாதைக்காரர்.

1970ல் ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டம், ஆலத்தம்பட்டி கிளைச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட துணைச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், கீழத் தஞ்சை மாவட்டச் செயலாளர், திருவாரூர் மாவட்ட அவைத்தலைவர், நாகை தெற்கு மாவட்ட அவைத்தலைவர் என பல்வேறு கழகப் பொறுப்புகளை வகித்தவர்.

ஊராட்சி மன்றத் தலைவராக – நகர்மன்றத் தலைவராக – 1971, 1977, 1984 ஆகிய மூன்று முறை வேதாரண்யம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றியவர்.

1965–ல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை புகுந்தவர். 1976ஆம் ஆண்டு மிசா காலத்தில் ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் “மா.மீ” என்று அன்புடன் அழைக்கப்பட்டவர். “எப்போதும் கருப்புத் துண்டு அணிந்து கம்பீரமாக உலவிய மா.மீ. அவர்கள் கழகத்தினரிடமும் பொதுமக்களிடமும் மிகுந்த நன்மதிப்பும் பெற்றிருந்தவர்” என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கல் உரையில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## சிவகங்கை மாவட்டத்தில்

# பேரறிஞர் அண்ணாவின் 115ஆவது பிறந்தநாள் விழா!

### அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் - மு.தென்னவன் - தமிழரசி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சிவகங்கை, செப். 21-

சிவகங்கை மாவட்டத்தில் பேரறிஞர் அண்ணாவின் 115 ஆவது பிறந்தநாள் விழா மாவட்டம் முழுவதிலும் சிறப்பாக கொண்டாடப் பட்டது.கழகக்கொடி ஏற்றியும் , பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கியும் கழக நிர்வாகிகள் கொண்டாடினார்கள்...

**காரைக்குடி**

காரைக்குடியில் பேரறிஞர் அண்ணா திருஉருவச் சிலைக்கு கூட்டுறவுத்துறை அமைச்சரும், மாவட்ட கழகச் செயலாளருமான கே ஆர். பெரிய கருப்பன் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், காரைக்குடி நகர் கழக செயலாளர் என்.குணசேகரன், நகர்மன்ற தலைவர். சே. முத்துதுரை, பொதுக்குழு உறுப்பினர்கள் பள்ளத்தூர் கே.எஸ். ரவி, திருமதி தெய்வானை இளமாறன், ஆதி.கண்ணாத்தாள், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனிசெந்தில்குமார்,தகவல் தொழில்நுட்ப அணி கலாகாசிநாதன், நிர்வாகிகள். சன் சுப்பையா, சொ.கண்ணன், மெ. பழனி, இராம. அன்பழகன், அ.சேவியர், போஸ் குணசேகரன், சே.சொக்கலிங் கம், இலக்கிய அணி காரை. சுரேஷ், ஜான். கென்னடி, உதயம் ராசு, துரை. நாகராஜ், மெ. கார்த்திக், அண்னை மைக்கேல், முகமது சித்தீக், நாச்சம்மை சிவாஜி, டெசோ, நகர்மன்ற உறுப்பினர்கள் துரை. அரிதாஸ், ராணி செய்தூண் சேட், சத்யாகார்த்தி கேயன், முத்துபழனியப்பன், மாவட்ட மகளீர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், திவ்யா சக்தி, மலர்வழி பழனியப்பன், விஷ்ணு பெருமாள், தனம் சிங்கமுத்து, பூமிநாதன், ஜான் பீட்டர், என்ஜினீயர் மைக்கேல், பிரசன்னா, கார்த்திக், இரா. சிவக்குமார், விஜயகுமார், சொ.ராதாகிருஷ்ணன், மா. பாண்டி,

சுப .சிதம்பரம், பா. கணேசன், சலீம், சாய் சுரேஷ், மாவட்ட ஆதிதிராவிடர் குழு தலைவர் கொத்தமங்கலம் சேது,ஒன்றிய செயலாளர்கள் சுப.சின்னத் துரை, குன்னக்குடி சுப்பிரமணியன், நா.நெடுஞ்செழியன்,கே.ஆர். ஆனந்த், லெ.ரவிச்சந் திரன், நாகனி ரவி, பூபாலசிங்கம், தேவகோட்டை நகர் செயலாளர் பெரி.பாலா, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார், அயலக அணி சன்சீமான். சுப்பையா, ஒன்றியத் துணை செயலாளர் முத்துக்குமார் சிறுபான்மை அணி சேவியர் , நெசவாளர்அணி தாமரைக்கண்ணன் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள் அனைவருக்கும் அமைச்சர் பெரிய கருப்பன் இனிப்புகளை வழங்கினார். தமிழக முதல்வரின் இரண்டரை ஆண்டின் ஆட்சியில் செய்த சாதனை விளக்க துண்டுப் பிரசுரங்களை பொதுமக்களிடம் வழங்கினார்.

**சிவகங்கை**

சிவகங்கை நகர் கழகத்தின் சார்பில் நீதிமன்ற சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு நகர்கழக செயலாளர் சி. எம்.துரை ஆனந்த் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்ச்சியில் மாவட்ட கழக துணை செயலாளர் கே. எஸ். எம். மணிமுத்து, ஒன்றிய செயலாளர்கள் எம்.ஜெயராமன், திருமலை முத்துராமலிங்கம், நகர் மன்ற துணைத் தலைவர் எம். கார் கண்ணன், நிர்வாகிகள் மதார், ஆறு.சரவணன் இளைஞரணி அயூப் கான், அரிஹரன், ஜெயகாந்தன் சரவணன், விஜய குமார், சோமசுந்தரம், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி திலகவதி கண்ணன், முத்துமணி, மஞ்சுளா, ஹரிகரன் நகர்மன்ற உறுப்பினர்கள் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

**மானாமதுரை**

மானாமதுரையில் அண்ணா சிலைக்கு நகர்கழக செயலாளர் க.பொன்னுச் சாமி அண்ணா சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்ச்சியில் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம். எல் .ஏ நகர்மன்ற தலைவர் எஸ். மாரியப்பன்கென்னடி,

துணைத்தலைவர் பாலா சுந்தர், ஒன்றிய செயலாளர்கள் துரை .ராஜா மணி, எம். அண்ணாதுரை, ஒன்றிய குழு தலைவர் லதா அண்ணாதுரை, துணை தலைவர் முத்துச்சாமி, நிர்வாகிகள் ரவிச்சந்திரன், கார்த்தி, பாஸ்கரன், மூர்த்தி, மகளிர் அணி சண்முகப்பிரியா, உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள் . திருப்புவனம். திருப்புவனத்தில் பேரறிஞர் அண்ணாவின் படத்திற்கு மாவட்ட கழக துணைச் செயலாளர் த. சேங்கைமாறன் மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்ச்சியில் பேருர்கழக செயலாளர் நாகூர் கனி ஒன்றிய செயலாளர்கள் எம்.ஏ.கடம்பசாமி திருமதி வசந்தி சேங்கைமாறன், மீனவரணி அண்ணாமலை மகேந்திரன் விவசாய அணி சேகர் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ரஹ்மத்துல்லா கான் மகேந்திரன் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

**இளையான்குடி**

இளையான்குடியில் முன்னாள் எம்.எல்.ஏ. சுப. மதியரசன் தலைமையில் அண்ணாவின் திருஉருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் பேரூராட்சி மன்ற தலைவர் பி.ஏ.நஜ்முதீன், துணைத்தலைவர் இப்ராஹிம், நிர்வாகிகள் சுப. தமிழரசன், காளிமுத்து, கண்ணன், இளைஞரணி பைரோஸ் கான் உள்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். அனைவருக்கும் இனிப்புகள் வழங்கியும் கழக அரசின் இரண்டரை ஆண்டு சாதனைகளை விளக்கும் துண்டுப்பிரசுரங்கள் வழங்கப்பட்டது. இளையான்குடி கிழக்கு ஒன்றின் சார்பில் சூராணத்தில் ஒன்றிய கழகச் செயலாளர் வே.தமிழ்மாறன் தலைமையில் அறிஞர் அண்ணாவின் திருஉருவப் படத்திற்கு மலர் மாலை அணிந்து நிர்வாகிகள் மரியாதை செலுத்தினார்கள். பொதுமக்களுக்கு இனிப்புகளும் கழக அரசின் 2 ஆண்டுகால சாதனை குறித்த துண்டு பிரசுரங்களும் வழங்கினார்கள்.

**திருப்பத்தூர்**

திருப்பத்தூர் ஒன்றிய பேரூர் கழகத்தின் சார்பில் பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாவட்ட கழகச் செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே.ஆர். பெரியகருப்பன் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் த. சேங்கை மாறன்,ஒன்றிய கழக செயலாளர் எஸ் சண்முக வடிவேலு ,பேரூர் கழக செயலாளர் ஆர்.கார்த்திகேயன், முன்னாள் மாநில இளைஞரணி அமைப்பாளர் திருப்பத்தூர் பஞ்சவர்ணம், பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி கோகிலராணி நாராயணன், ஒன்றிய பொருளாளர். ஏ.எம். கண்ணன், நிர்வாகிகள் ராம. ரவி , உதயம் சண்முகம், ஷாஜகான், இளைஞரணி பஷீர் அகமது, வைகை மாறன், மனோகரன், மாவட்ட சுற்றுப்புற சூழல் அணி அமைப்பாளர் அ.வல்லபாய் , மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் சன் சீமான் சுப்பையா, மாவட்ட சிறுபான்மையினர் நல அமைப்பாளர் என்.எம். சாக்ளா, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டுஅணி அமைப்பாளர் கே. எஸ். நாராயணன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் எஸ் .எஸ். அருணாச்சலம், ஒன்றிய துணை செயலாளர் முத்துக்குமார், ஆகியோர் கலந்து கொண்டார்கள். பொது மக்களுக்கும் கட்சி நிர்வாகிகளுக்கும் அமைச்சர் கே ஆர் . பெரிய கருப்பன் இனிப்புகளை வழங்கினார். .நெற்குப்பை பேரூராட்சியில் பேரூர் கழக செயலாளரும் பேரூராட்சி மன்ற தலைவருமான கேபிஎஸ்

பழனியப்பன் மற்றும் நிர்வாகிகள் அண்ணாவின் திருவருவப்ப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் கள்.

**தேவகோட்டை**

தேவகோட்டை நகர்கழக செயலாளர் பெரி. பாலா தலைமையில் அண்ணாவின் திருவருபடத்திற்கு நிர்வாகிகள் அன்பு செல்வம் இளங்கோ உட்பட நிர்வாகிகள் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள்.

27 ஆவது வார்டில் பொதுக்குழு உறுப்பினர் மதார்சேட், சாகீர்உசேன் மற்றும் நிர்வாகிகள் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார் கள். காளையார் கோவில் தெற்கு ஒன்றியம் மறவமங்கலத் தில் ஒன்றிய கழக செயலாளர் யோக. கிருஸ்ணகுமார் தலைமையில் நிர்வாகிகள் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. முதல்வரின் இரண்டரை ஆண்டு ஆட்சியில் நடைபெற்றுள்ள சாதனைகள் அடங்கிய துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டது.

மாவட்ட கழக செயலாளரும் கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர். பெரியகரூப்பன் ஆலோசனையின் பேரில் மாவட்டம் முழுவதிலும் தமிழக முதல்வர் தளபதி அவர்களின் இரண்டு ஆண்டுகளை சாதனைகளை விளக்கும் துண்டு பிரசுரங்கள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது. மேலும் கலைஞர் மகளீர்உரிமை திட்டம் துவக்கப்படுவதை முன்னிட்டு ஆங்காங்கே கோலப் போட்டிகள் நடைபெற்றது.

## சு.சுப்பிரமணியன் தலைமையில்

# நெல்லை மாநகர தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### கழக முன்னணியினர் பங்கேற்பு!

நெல்லை.செப்.21-

நெல்லை மாநகர திமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாநகர கழக அலுவலகத்தில் வைத்து மாநகர செயலாளர் சு.சுப்பிர மணியன் தலைமையில் துணை செயலாளர் அப்துல் கையூம் பகுதி செயலாளர்கள் அன்டன் செல்லதுரை (பாளை) சாகுல் ஹமீது(மேலப்பாளையம்)ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. நெல்லை பகுதி செயலாளர் நமச்சிவாயம் வரவேற்புரை யாற்றினார்.

கூட்டத்தில் BLC பட்டியல் சரி செய்வது தொடர்பாகவும்,மக்களை தேடி திமுக நிகழ்வை நெல்லை மாநகர திமுக சார்பில் நடத்துவது தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாநகரப் பிரதிநிதிகள் சிவா,ஜான்சன்,சுண்ணாம்புமணி, வள்ளியின் செல்வன்,பீர் மஸ்தான், மாரியப்பன், காசிமணி, ஆஷிக்,பகுதி கழக நிர்வாகிகள் சுப்பையா,நாதன், ஸ்டார் முருகன், கமாலுதீன்,அப்துல் சுபஹாணி, பாஸ்கர், வதனகுமாரி, மாமன்ற உறுப்பினர் கேண்டீன் மணி, வேங்கை வெங்கடேஷ், ஜவகர், அவதார் ஷாஜகான், ஸ்டார் அப்துல்,ஹுசைன், டவுண் அக்பர், அஸ்ஸாம், செய்யது அலி, சார்லஸ்,முத்து, ஷெட்டி, இனியன், பேச்சிமுத்து, முத்தையா,

வழக்கறிஞர் சுரேஷ்குமார், மைக்மணி,மகாராஜன், தளபதி ஆறுமுகம், ராமச்சந்திரன்,சித்திக் ரகுமான்ஷா, கோபாலகிருஷ்ணன், வினோத்,மில்குமார்,வெங்கடேஸ்வரன், சாகுல் ஹமீது, யாசின், சிரிப்பு சேக்,மீன் கனி,அருள்ராஜ், கணேசபெருமாள், செந்தில்,ஐயப்பன்,கார்த்திக்,வட்ட செயலாளர்கள் மாரிமுத்து, தொப்பி காஜா,கேபிள் குமரேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட பிரதிநிதி கந்தன் நன்றி உரையாற்றினார்.

இந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு.

பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்தநாள் விழா,பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்கள் பிறந்த நாள் விழா,மற்றும் கழகத்தின் பவள விழா

ஆண்டு தொடக்க விழா ஆகிய முப்பெரும் விழாவை மிகச் சீரும் சிறப்பாக நடத்திய கழகத் தலைவர் முதலமைச்சர் தளபதியார் அவர்களுக்கு நன்றி தெரிவித்து நெல்லை மாநகர திமுக சார்பில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் செயல்படுத்திய கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டத்தால் நெல்லை மாநகரப் பகுதி குடும்பத் தலைவிகள் மிகுந்த மகிழ்ச்சியோடு உள்ளனர். இத்திட்டத்தை கொண்டு வந்த கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பது என்றும்.

கழகத்தின் பவள விழாவை முன்னிட்டு ஆண்டு முழுவதும் சீரும் சிறப்புமாக கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறியும்,கழகத்தின் 75 ஆண்டுகால வரலாறு மற்றும் கொள்கைகளை மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் ஆண்டும் முழுவதும் நெல்லை மாநகர கழகத்தின் சார்பாக பவள விழாவை கொண்டாடுதல் என்றும்.

நீட் தேர்வுக்கு எதிராக கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கியுள்ள கையெழுத்து இயக்கத்தில் நெல்லை மாநகர கழக இளைஞரணி மூலம் 25000 ம் பேரிடம் நீட் தேர்வுக்கு எதிராக கையெழுத்து பெறுதல் என்றும்.

முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர் அவர்களின் வழிகாட்டுதலின்படி "மக்களை தேடி திமுக" திட்டத்தின் மூலம் நம் கழக அரசிற்கும் நெல்லை மாநகர கழக மக்களுக்கும் பாலமாக இருந்து,மக்கள் சந்திக்கும் சவால்கள்,அரசு கொண்டு வரும் அனைத்து மக்கள் நலத்திட்டங்களையும் அவர்களிடம் கொண்டு சேர்க்க,அடுத்த 2 மாதங்களுக்கு மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் அவர்கள் தலைமையில் அனைத்து மாநகர கழக நிர்வாகிகள்,பகுதி கழக,வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அனைவரும் இணைந்து அயராது உழைப்பது என்றும்.

தமிழ்நாட்டின் நலனுக்காகவும், தமிழ்நாட்டின் உரிமைக்காகவும் போராடி மெட்ராஸ் மாநகரம் என்று இருந்த பெயரை தமிழ்நாடு என்று மாற்றி வரலாறு சாதனை படைத்த பேரறிஞர் அண்ணா அவர்கள் குறித்த தவறான சர்ச்சைக் கருத்து தெரிவித்த பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலைக்கு கடுமையான கண்டனங்கள் தெரிவிப்பது என்றும் தீர்மானிக்கப் பட்டது.

நெல்லை மாநகர தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் முத்து சுப்பிரமணியன் அவர்களின் தாத்தா ஆவுடையப்ப பிள்ளை மறைவிற்கும், நெல்லை மாநகர அவைத் தலைவர் டாக்டர்.பொன் மணி மறைவு உட்பட 10 பேர்களுக்கு இரங்கல் தீர்மானம் நிறை வேற்றப் பட்டது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

## புதுக்கோட்டையில்

# கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்!

புதுவை, செப்.21–

முதலமைச்சர் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளையொட்டி காஞ்சிபுரம், பச்சையப்பன் ஆடவர் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற விழாவில், மகளிர் பயன் பெறும் வகையில், மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000/ வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கி வைத்தார். அதனைத்தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், தேக்காட்டூர் கிராமம், சிவபுரம் ஜெ.ஜெ. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி மற்றும் புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் அம்பாள் திருமண மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மகளிருக்கு வங்கி பற்று அட்டைகளை (ATM Card) வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, புதுக்கோட்டை நகர்மன்றத் தலைவர் திருமதி.திலகவதி செந்தில், நகர்மன்றத் துணைத் தலைவர் எம்.லியாகத் அலி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் திருமுருகேசன், ஒன்றியக் குழுத் தலைவர்கள் திருமதி.மேகலா முத்து (அரிமளம்), திருமதி. வள்ளியம்மை தங்கமணி (திருவரங்குளம்), திருமதி.மகேஸ்வரி சண்முகநாதன் (அறந்தாங்கி), ஒன்றியக்குழு உறுப்பினர் அழகு (எ) சிதம்பரம், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் த.சந்திரசேகர், அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

## சட்டப்பேரவை முன்னாள் தலைவர் சேடப்பட்டி முத்தையா நினைவேந்தல் நிகழ்ச்சி!

# மதுரையில் கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி: அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கல்!

### மு.மணிமாறன் தலைமை! அமைச்சர் பி.மூர்த்தி - கோ.தளபதி முன்னிலை!

மதுரை, செப் 21-

மதுரை தெற்கு மாவட்ட திமுக சார்பில் மூத்த கழக முன்னோடி களுக்கு பொற்கிழி வழங்கும் விழா மற்றும் முன்னாள் சபாநாயகர் சேடபட்டி இரா.முத்தையா அவர்களின் முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி இன்று நடைபெற உள்ளது. இதில் கழக இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளார்.

இந்நிகழ்ச்சிக்கு தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமை ஏற்கிறார். மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., முன்னிலை யேற்று சிறப்பிக்கிறார்கள்.

மதுரை தெற்கு மாவட்டம் திருமங்கலம் தொகுதி தே.கல்லுப்பட்டி ஒன்றியம் முத்தப்பன்பட்டி சேடபட்டியார் திடலில் முன்னாள் சபாநாயகரும், கழக தேர்தல் பணிக்குழு செயலாளருமான சேடபட்டி

இரா.முத்தையா அவர்களின் முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சியும், அதைத் தொடர்ந்து கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் விழாவும் இன்று (21.9.2023) வெகு சிறப்பாக நடைபெற உள்ளது.

சிறப்புமிக்க இந்நிகழ்ச்சிக்கு மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமை வகிக்க மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., முன்னிலை வகிக்கிறார்கள். பொற்கிழி பெறும் கழக மூத்த முன்னோடிகள் அமரும் வகையில் சிறப்பான ஏற்பாடுகளும், மதியம் அறுசுவை விருந்துக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

பொற்கிழி வழங்கும் விழாவில் கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கி கவுரவித்து, எழுச்சி உரையாற்ற உள்ளார்.

சிறப்புமிக்க இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பெரு மக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழக மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக, செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், கழக உடன் பிறப்புகள் என பெரும் திரளானோர் பங்கேற்க உள்ளார்கள். இதற்கான ஏற்பாடுகள் சிறப்பாகவும், தீவிரமாகவும் நடைபெற்று வருகிறது.

## நாகர்கோவில் மாநகராட்சிப் பகுதிகளில்

# ரூ.1 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சித் திட்டப் பணிகள்!

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் - நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தொடங்கி வைத்தார்!

நாகை, செப்.21-

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்கு உட்பட்ட பள்ளி விளை அம்மன் கோவில் மேலத் தெரு, சைமன் நகர், கம்பர் தெரு, வெள்ளாரன் விளை, வட்டவிளை சானல் கரை, பைத்துமால் நகர், ஆசாரிமார் பெரிய தெரு ஆகிய பகுதிகளில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் சாலை மற்றும் மழைநீர் வடிகால் ஓடை பக்கச்சுவர் அமைக்கும் பணிகளை கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் மாநகராட்சி ஆணையாளர் ஆனந்த் மோகன் மாநகராட்சி உதவி பொறியாளர் திருமதி. ராஜசீலி, இளநிலை பொறியாளர் ராஜா, துணை மேயர் திருமதி. ம.மேரி பிரின்ஸி லதா, மண்டல தலைவர்கள் இ.ஜவகர், திருமதி. கு.அகஸ்டினா கோகிலவாணி, பா.செல்வகுமார், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி. பி. அனுஷா பிரைட், திருமதி. க.சிஜி பிரவின், திருமதி. சு.அனிலா, கி.கோபால சுப்பிரமணியன், ஐயப்பன் உட்பட கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.




கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்கு உட்பட்ட பள்ளிவிளை அம்மன் கோவில் மேலத் தெரு, சைமன் நகர், கம்பர் தெரு, வெள்ளாரன்விளை, வட்டவிளை சானல் கரை, பைத்துமால் நகர், ஆசாரிமார் பெரிய தெரு ஆகிய பகுதிகளில் ரூ. 1 கோடி மதிப்பீட்டில் சாலை மற்றும் மழைநீர் வடிகால் ஓடை பக்கச்சுவர் அமைக்கும் பணிகளை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் துவக்கி வைத்தார்.நிகழ்ச்சியில் மாநகராட்சி ஆணையாளர் ஆனந்த் மோகன், மாநகராட்சி உதவி பொறியாளர் திருமதி. ராஜசீலி, இளநிலை பொறியாளர் ராஜா, துணை மேயர் திருமதி. ம.மேரி பிரின்ஸி லதா, மண்டல தலைவர்கள் இ. ஜவகர், திருமதி. கு.அகஸ்டினா, கோகிலவாணி, பா.செல்வகுமார், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி. பி. அனுஷா பிரைட், திருமதி. க.சிஜி பிரவின், திருமதி. சு.அனிலா, கி. கோபால சுப்பிரமணியன், ஐயப்பன் உட்பட கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.



அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தனியார் பள்ளிகளில் பணியாற்றும் தமிழ் ஆசிரியர்களுக்கான புத்தாக்க பயிற்சியை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் செயல்படும் சி. பி.எஸ்.இ., ஐ.சி.எஸ்., எ.ஜி.சி.எஸ்.இ., ஐ.பி. பள்ளிகளைச் சேர்ந்த தமிழ் ஆசிரியர்கள் இந்த பயிற்சி முகாமில் கலந்துகொண்டார்கள். இந்நிகழ்வில் பள்ளிக் கல்வித்துறை முதன்மை செயலாளர் திருமதி.காகர்லா உஷா, பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் முனைவர் க.அறிவொளி, தனியார் பள்ளிகள் இயக்க இயக்குநர் நாகராஜ் முருகன், சி.பி.எஸ்.இ. மண்டல அலுவலர் தினேஷ் ராம் ஆகியோர் கலந்துகொண்டார்கள்.



நெல்லை மாநகர தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாநகரக் கழக அலுவலகத்தில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. உடன் கழக நிர்வாகிகள் நமச்சிவாயம்,அப்துல் கையூம், துபாய் சாகுல்,அண்டன் செல்லத்துரை உள்பட பலர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (20.9.2023) தலைமைச் செயலகத்தில், தியாகி இம்மானுவேல் சேகரனார் அவர்களின் மகள் திருமதி. பிரபாராணி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என்.கயல்விழி செல்வராஜ், தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், சட்டமன்ற உறுப்பினர்கள் காதர்பாட்சா முத்துராமலிங்கம், செ.முருகேசன். தேவேந்திரர் பண்பாட்டு கழகத்தின் தலைவர் பாலன் மற்றும் நிர்வாகிகள், மக்கள் விடுதலைக் கட்சி நிர்வாகிகள் ஆகியோர் சந்தித்து, தியாகி இம்மானுவேல் சேகரனார் அவர்களுக்கு பரமக்குடியில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்படும் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

திண்டுக்கல் - அம்பிளிக்கை சுரேஷ் மர்ம மரணம்! ஒட்டன்சத்திரம்

# அ.தி.மு.க. செயலாளர் நடராஜனின் ஜாமீன் மனு தள்ளுபடி!

## உயர்நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவு!

திண்டுக்கல், செப்.21-

திண்டுக்கல், அம்பிளிக்கை கிராமத்தைச் சேர்ந்த சுரேஷ் என்பவர் கடந்த மாதம் மர்மமான முறையில் இறந்ததையடுத்து நடைபெற்று வரும் வழக்கில் தன்னையும் சேர்க்க போலீசார் முயற்சி எனக்கூறி அ.தி.மு.க.வைச் சேர்ந்த நடராஜன் என்பவரின் முன்ஜாமின் மனுவை தள்ளுபடி செய்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஒன்றிய அ.தி.மு.க. செயலாளரும், 2021ஆம் ஆண்டில் நடந்த சட்டசபை தேர்தலில் தற்போதைய அமைச்சர் அர.சக்கரபாணியை எதிர்த்து ஒட்டன்சத்திரம் தொகுதியில் அ.. தி.மு.க. சார்பில் போட்டியிட்டவருமான நடராஜன், தனக்கு முன்ஜாமீன் கேட்டு மதுரை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில் அவர் கூறியிருந்ததாவது:

திண்டுக்கல் மாவட்டம் அம்பிளிக்கை கிராமத்தைச் சேர்ந்த சுரேஷ் (வயது 30). கடந்த மாதம் மர்மமான முறையில் இறந்ததாகவும் அவரது உடலை உறவினர்கள் மயானத்தில் வைத்து எரித்துவிட்டதாகவும் கிராம நிர்வாக அலுவலர் போலீசில் புகார் தெரிவித்தார். அதன் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து வடிவேலு உள்ளிட்ட சிலரை கைது செய்தனர்.

இந்த நிலையில் சுரேஷ் இறப்பு தொடர்பாக மேலும் சிலர் மீது சந்தேகப்படும் வகையில் போலீசார் விசாரித்து வருகின்றனர். கைதானவர்கள் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் என்னையும் இந்த வழக்கில் சேர்க்க போலீசார் முயற்சி செய்கின்றனர்.

இது அரசியல் பழிவாங்கும் நடவடிக்கை. இந்த வழக்கில் எனக்கு முன்ஜாமீன் வழங்கி உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதி இளங்கோவன் முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது அரசு கூடுதல் குற்றவியல் வக்கீல் பா.நம்பி செல்வன் ஆஜராகி, சுரேஷ் மர்மமான முறையில் இறந்தது குறித்து மனுதாரரிடம் போலீசார் காவலில் விசாரிக்க வேண்டியுள்ளது. எனவே இந்த விவகாரம் தீவிரமானது என போலீசார் கருதுகின்றனர். இதனால் மனுதாரருக்கு முன்ஜாமீன் அனுமதிக்க கூடாது. இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதாடினார்.

இதை பதிவு செய்து கொண்ட நீதிபதி, மனுதாரரின் முன்ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.










முரசொலி பாசறை

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் இலவச பஸ் பாஸ்.**

# இடம் பொருள் கலைஞர் 36

# இலவச பஸ் பாஸ்

## கல்வியை நெருக்கமாக்கிய தொலைநோக்கு!





அன்றெல்லாம் தனியார் பேருந்துகள்தான் இருந்தன. அதுவும் பெரும்பாலும் நகரங்களில். அதுவும் எந்த வழித்தடங்களில் பயணிகள் கூட்டம் அதிகமாக இருக்குமோ அந்த வழித்தடங்களில் மட்டும்தான் பேருந்துகள் இயங்கும். அதிலும் காலையும் மாலையும் மட்டும்தான் பேருந்து வசதி இருந்தது.

கிராமங்களைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். சாதிக் கட்டமைப்பு இறுகிப் போயிருந்த அந்தக் காலகட்டத்தில் பேருந்துகள் சில கிராமங்களுக்குப் போகும், சில கிராமங்களுக்குப் போகாது.

இப்படியான சூழலில்தான் முத்தமிழறிஞர் கலைஞர் முதல்வராக இருந்த 1971-1976 காலகட்டத்தில் பேருந்துகளை அரசுடைமையாக்கி, போக்குவரத்துக்கு எனத் தனித்துறை ஒன்றையும் ஏற்படுத்தினார். 1973-இல் தமிழ்நாடு பொதுப் பேருந்துகள் மற்றும் ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்டம் என்கிற சட்டத்தின் கீழ், எந்தெந்த மாவட்டங்களில் பேருந்துகள் குறைந்த எண்ணிக்கையில் உள்ளனவோ அங்கெல்லாம் முதலில் அரசுடைமை நடவடிக்கையை அமல்படுத்தி, பிறகு அடுத்தடுத்து ஏறுவரிசையில் ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று ஐந்தாண்டுகளில் அரசுடைமையாக்கலை முழுமைப்படுத்துவது எனத் திட்டமிடப்பட்டது. அவ்வாறு பேருந்துகள் அரசுடைமையாக்கப்பட்ட முதல் மாவட்டம் நீலகிரி மலை மாவட்டமாகும்.

### பேருந்து அரசுடைமையானதன் பயன்!

இவ்வாறு பேருந்துகள் அரசுடைமையானதன் பயன் என்னவென்று பார்த்தால், தமிழ்நாட்டின் எந்த மூலைக்கும் நாம் இன்று 12 மணி நேர இடைவெளியில் சென்றுவிட முடியும் என்கிற வசதி. ஆனால், அது மட்டுமேதான் பயனா என்றால் இல்லை.

உள்ளடங்கிய கிராமப்புறங்களுக்கும் தொடர்பு வசதி, விரிவடைந்த வணிகம், உருவான புதிய சந்தைகள், அதனால் ஏற்பட்ட வேலைவாய்ப்பு, பணிக்குச் சென்று வர பாதுகாப்பான சூழல், அரசுக்கு நிதிச்சுமை இல்லாமை எனப் பல நன்மைகள் அரசுடைமையால் கிடைத்தன. அதிக வரி வருவாயும் கிடைத்ததால், இதர மாநிலங்களை ஒப்பிடும்போது நல்ல லாபத்தையும் ஈட்டி வருகிறது.

மேலும் இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையில் அரசுப் பேருந்துகள் இருப்பதும், குறைந்த பயணக் கட்டணம் இருப்பதும் தமிழ்நாட்டில்தான். தவிர, இந்தத் துறையின் மூலம் கிடைத்த லாபத்தைக் கொண்டு தொடக்கக் காலங்களில் ஒரு பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, 3 பாலிடெக்னிக்குகள் கூட உருவாக்கப்பட்டன.

### கல்வியை நெருக்கமாக்கிய ‘பாஸ்’

முன்பு கிடைத்தற்கு அரிதாக இருந்த கல்வியை, அடித்தட்டு மக்களுக்குக் கிடைக்கக் காரணமாக இருந்தது, ஒன்றாம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு வரை மாணவர்களை ஃபெயில் ஆக்கக் கூடாது என்ற ‘ஆல் பாஸ்’ கொள்கை மட்டுமல்ல... கல்வி கற்பதற்காக மேற்கொள்ள வேண்டியிருந்த பயணத் தூரத்தையும், பயணச் செலவையும் குறைத்த ‘இலவச பஸ் பாஸ்’ திட்டமும்தான்.

“இந்தியாவில் எந்த மாநிலமும் நிறைவேற்றாத புரட்சிகரமான திட்டங்களில் ஒன்றாக அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் எட்டாம் வகுப்பு வரை பயிலும் ஏழை எளிய மாணவ-மாணவியர் வீட்டிலிருந்து பள்ளிக்கூடம் செல்வதற்கு தமிழ்நாடு அரசின் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்ய ‘இலவச பஸ் பாஸ் வழங்கும் திட்டம்’ 1989-1990 கல்வியாண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தினால் 7லட்சத்து 19ஆயிரத்து 689 மாணவர்கள் பயனடைந்ததாகக் **‘கலைஞர் செதுக்கிய தமிழகம்’** நூலின் ஆசிரியர் புலவர் முத்து வாவாசி தெரிவிக்கிறார்.

**வளர்ச்சிக் குறியீடுகளில் தமிழ்நாடு முதல் வகுப்பில் ‘பாஸ்’ ஆகக் காரணம் இந்த இலவச பஸ் ‘பாஸ்’ என்றால் மிகையில்லை!**

அந்தக் காலகட்டத்தில், அரசு அங்கீகாரம் பெற்ற உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி, கல்லூரி மாணவர்கள் ஆகியோர் அரசுப் பேருந்துகளில் சென்னை, குமரி மாவட்டங்களில் 50 சதவிகிதச் சலுகைகள் கட்டணத்திலும் மற்ற மாவட்டங்களில் 33.3 சதவிகிதச் சலுகைக் கட்டணத்திலும் பயணம் செய்ய அனுமதிக்கப் பட்டனர். 1990-ஆம் ஆண்டு ஏப்ரல் 1 முதல் எல்லா மாவட்டங்களிலும் 50 சதவிகித சலுகைத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. போலவே, மாலை நேரக் கல்லூரி மாணவர்கள் அனைத்து வழித் தடங்களிலும் செல்லும் அரசுப் பேருந்துகளில் பயணம் செய்வதற்கு அளிக்கப்பட்டிருந்த 33.3 சதவிகித கட்டணச் சலுகை, 50 சதவிகிதமாக உயர்த்தப்பட்டது.

### ‘மகனுக்காக அல்ல... மாணவர்களுக்காக...’

பிறகு 1996-ஆம் ஆண்டு ஜூலை 16 -ஆம் தேதி, 1996-1997 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்யும்போது, அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள், “1989-91 ஆம் ஆண்டுகளில் கழக அரசு ஆட்சியில் இருந்தபோது, எட்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு அரசுப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்வதற்கான சலுகை அளிக்கப்பட்டது. இச்சலுகையைப் பத்தாம் வகுப்புவரை படிக்கும் மாணவர்களுக்கும் இந்த ஆண்டு முதல் நீட்டிக்கப்படும்” என்று கூறியிருந்தார்.

பின்னர் ஜூலை 25-ஆம் தேதி, அந்த நிதிநிலை அறிக்கை மீதான விளக்கத்துக்குப் பதிலளித்து, சட்டமன்றத்தில் கலைஞர் அவர்கள் உரையாற்றும்போது, “மற்றொரு வேண்டுகோள் உறுப்பினர் மு.க.ஸ்டாலின் அவர்களால் வைக்கப்பட்டு, பேராசிரியர் தீரன், பழனிச்சாமி, திருநாவுக்கரசு, எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோராலும் வழிமொழியப்பட்ட ஒன்று. ஆனால், பத்து கோடி ரூபாய் அதிகமாகும். பத்தாவது வரையிலே படிக்கின்ற மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் என்று இருந்தது. அதைப் பிளஸ்-2 வரையில் ஆக்க வேண்டும் என்று உறுப்பினர் ஸ்டாலின் சொல்லி, எதிர்க்கட்சித் தலைவர் அவையிலே வழிமொழிந்தார் உங்களின் காரணத்தால் மகனுக்காக அல்ல - அவை உறுப்பினர்களுக்காகவும் மாணவர்களுக்காகவும் உங்கள் அத்தனை பேர்களுடைய வேண்டுகோளை ஏற்று, பிளஸ்-2 வரையிலே இலவச பஸ் பாஸ் மாணவர்களுக்கு வழங்கப்படும்” என்று தெரிவித்தார்.

2006-ஆம் ஆண்டு வரை, அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், அரசு பல்வகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் ஆகியவற்றில் பயிலும் மாணவர்களுக்குச் சலுகைக் கட்டணத்தில்தான் பேருந்துப் பயண அட்டைகள் வழங்கப்பட்டன. ஆனால், 2007-2008 கல்வியாண்டு முதல் கலைஞர் அரசால் இலவசப் பேருந்துப் பயண அட்டைகள் வழங்கப்பட்டன.

முத்தமிழறிஞர் கலைஞர் தொடங்கிய இந்தத் திட்டம் இன்றும் தொடர்கிறது. இத்திட்டத்தினால் பள்ளி, கல்லூரிகளில் சேரும் மாணவர் விகிதம் அதிகரித்துள்ளது. மாறி வரும் சூழலுக்கு ஏற்ப கலைஞர் சிந்தித்ததன் விளைவாக மாற்றுத் திறனாளிகள், மூத்தக் குடிமக்கள், எய்ட்ஸ் உள்ளிட்ட நோய்களால் பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்கும் கட்டண சலுகையில் பஸ் பாஸ் என்று விரிந்து, இன்று மகளிருக்கு இலவசப் பேருந்துப் பயணம் என்று வளர்ந்திருக்கிறது.

ஆம்... வளர்ச்சிக் குறியீடுகளில் தமிழ்நாடு முதல் வகுப்பில் ‘பாஸ்’ ஆகக் காரணம் இந்த இலவச பஸ் ‘பாஸ்’ என்றால் மிகையில்லை!

**...வலம் வருவோம்**

## கேரள அமைச்சருக்குத் தீண்டாமைக் கொடுமை!

“அண்மையில் பையனூர் கோயில் விழாவில், அமைச்சர் என்ற முறையில் பங்கேற்றேன். சிவன் கோயில் நடைப்பந்தலை நான் திறந்து வைத்தேன். அப்போது குத்துவிளக்கு ஏற்றுவதற்கான தீபத்தை அர்ச்சகர் என் கையில் தராமல் தரையில் வைத்துச் சென்றார். நான் அந்த தீபத்தைத் தரையில் இருந்து எடுத்து ஏற்ற வேண்டும் என அவரது சாதி நம்பிக்கையின் அடிப்படையில் செய்தார். அதிகாரிகள் பின்னர் அந்த தீபத்தை எடுத்து என் கையில் கொடுத்த போதும் நான் அதைப் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டேன். நான் குத்துவிளக்கு ஏற்றவில்லை. என்னுடன் வந்த சட்டமன்ற உறுப்பினரும் குத்துவிளக்கு ஏற்றவில்லை.

மீன் வியாபாரிகள், கசாப்புக் கடைக்காரர்களின் கைகளில் கைமாறி வரும் பணத்தில் தீண்டாமை பார்க்காத கோயில் அர்ச்சகர்கள் அந்த மக்களிடம் தீண்டாமைக் கொடுமையைக் கடைப்பிடிக்கிறார்கள். மக்களை எங்கே எப்படிப் பிரித்து வைப்பது நடத்துவது, என்பது சாதிக் கட்டமைப்பைப் பேணுகிறவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. காரணம், சாதிக் கட்டமைப்பை உருவாக்கியவர்கள், மற்ற சாதியினரை விட தங்கள் சாதியார் உயர்ந்தவர்கள் என நினைக்கிறார்கள். ஒவ்வொரு சாதியினரும் தங்களுக்குக் கீழ் உள்ள சாதியினரை விடத் தாங்கள் உயர்ந்தவர்கள் என நினைக்கிறார்கள்”.

**-கேரள மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ராதாகிருஷ்ணன்.**

## :ப்ளாஷ்பேக்



### வாழ்த்தும் அறிவுரையும்!

நான் 17 வயதிலிருந்தே கட்சிக்காக என்னை ஒப்புவித்துக் கொண்டவன். பல்வேறு போராட்டங்களில் பங்கு கொண்டு சிறை சென்றுள்ளேன். 1997-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியின் மேயராக இருந்த தளபதி அவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்துக்கு வருகை தந்திருந்தார். இன்றைய சட்டத்துறை அமைச்சர் அண்ணன் ரகுபதி அவர்களும் அந்தக் கூட்டத்தில் பங்கேற்றார். அப்போது தளபதி அவர்களுக்கு சால்வை அணிவித்து, வாழ்த்துத் தெரிவித்தேன். என்னைப் பற்றி விசாரித்துச் சிறப்பாகக் கழகப் பணியாற்றுமாறு அறிவுறுத்தினார்..



தங்கராஜ்

**-தங்கராஜ், முன்னாள் கிளைப் பொருளாளர், புதுக்கோட்டை.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி :
அன்பகம், 614, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை, சென்னை- 600 018.
வாட்ஸ்அப் எண்: 90033-24473,
மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### அண்ணா கண்காணிக்கிறார்!

**1970-ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சியைக் குறித்து ‘கேரவன்’ இதழ் புகழ்ந்து எழுதியது. “46 வயது நிரம்பிய தமிழ்நாடு முதலமைச்சர், திறமைமிக்க நுட்பவாதி என்பதை நிரூபித்து விட்டார். அண்ணாவின் புகழும் பெருமையும் மங்காதிருக்குமாறு காத்து வருகிறார். அண்ணா நமது எல்லா செயல்களையும் கண்காணித்து வருகிறார் என்ற உணர்வையே அவர் ஏற்படுத்தி வருகிறார். அமைச்சர்களின் சிறப்பியல்பு என்னவெனில், அவர்கள் ஒரே குரலில் பேசுகிறார்கள் என்பதுதான்” என கலைஞரின் ஆட்சியைப் புகழ்ந்தது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 247




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.